# செம்பதாகை

மலர்: 4
இதழ்: 1
தை 1982
விலை ரூபா 1-00

புரட்சிகர வெகுஜன ஏடு


★ உயர் வர்க்கத்திற்கு வசதி ஏற்படுத்தும ★ தாய்மொழி-இலவசக் கல்வியை சீரழிக்கும் ★ கிராமப்பாடசாலைகளை புறக்கணிக்கும் ★ குலத்தொழிலை ஊக்குவிக்கும்

# கல்வி வெள்ளை அறிக்கையை வாபஸ் வாங்கு!

நாட்டின் சகல பொதுத்துறைகளையும் சீரழித்து சின்னபின்னப்படுத்தி, பெருமுதலாளிகளுக்கும் சொத்துடைய உயர் வர்க்கத்திற்கும் வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த யூ.என்.பி. ஆட்சி, இப்பொழுது கல்வித் துறையிலும் உயர்வர்க்கத்திற்கு முற்றுமுழுதான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் கல்வி வெள்ளை அறிக்கையைக் கொண்டுவந்துளது.

கல்விவெள்ளை அறிக்கையை மிகவும் நாசுக்கான முறையில் கெட்டித்தனமாக நிறைவேற்றிவிடலாம் என்றே யூ. என். பி. ஆரம்பத்தில் மனப்பால் குடித்தது. ஆனல் இந்நாட்டு மக்கள் குறிப்பாக கல்வியாளர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், முற்போக்குசக்திகள் கல்வி வெள்ளையறிக்கையில் அடங்கியுள்ள நச்சுத்தனங்களை அம்பலத்திற்குகொண்டு வந்தனர். அதனுல் நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் கல்வி வெள்ளை அறிக்கைக்கு மாணவர்கள், ஆசிரியர்கள் மக்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் பாராளுமன்றத்துக்கு முன்னல் திரண்டு நின்று ஆர்ப்பாட்டம் நடாத்தும் அளவிற்கு கல்விவெள்ளை அறிக்கை எதிர்ப்பைப் பெற்றுள்ளது.

எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும கல்வி வெள்ளை அறிக்கையை அமுல் செய்தே தீருவோம் என்று அரசாங்கம் தனது மூர்க்கத்தனத்தை காட்டி வருகிறது; மாணவர்களைப் பார்த்து 'நீங்கள் பழி வாங்கப்படுவீர்கள்' என்ற தோரணையில் ஜனதிபதி ஜே. ஆர். எச்சரிக்கை செய்துள்ளார். அதேவேளை தாங்கள் தாய்மொழிக் கல்விக்கும் இலவசக் கல்வி முறைக்கும் எவ்விதத்திலும குந்தகம் விளைவிக்கப் போவதில்லை என்றும் ஓயாது கூறிவருகின்றனர். இதை நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை. எவ்வாறு இ.போ.ச. என்ற போக்குவரத்துஅமைப்பைப் பெயரளவில் வைத்துக் கொண்டு தனியார் போக்குவரத்துச் சேவை கொண்டுவரப்பட்டு இ. போ. ச. என்ற அப்பொதுத் துறை படிப்படியாகச் சீரழிக்கப்பட்டுவிட்டதோ அதேகதி தான் கல்வித்துறையில் தாய்மொழி- இலவசக் கல்விக்கும் இவ்வெள்ளையறிக்கை மூலம் ஏற்படும் என்பதை சகலரும் உணர்கின்றனர். இதன்முன்னேடியாக ஏற்கனவே தனியார் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டுளது. அவ்வாறே தனியார்பொறியியல் கல்லூரியும் அமையவுள்ளது. அக்கல்லூரிகளுக்கு ஒருலட்சம் ரூபா உள்ள ஒரு மாணவன் மட்டுமே செல்ல முடியும் என்ற நிலை ஏற்பட்டுளது. இவ்வாறன நிலைமைகளே காலப்போக்கில்கல்விவெள்ளை அறிக்கையால் ஏற்படப்போகின்றது இது இந்நாட்டுச் சாதாரண மக்களுக்கு பெரும் அநீதியாகும்.

கொத்தணி என்ற அமைப்பால் கிராமியப் பாடசாலைகள் வெறும் தங்குமடங்களாக மாற்றப்படும். நகரங்களிலுள்ள குறிப்பிட்ட பாடசாலைகளின் கதவுகள் வசதி படைத்தவர்களின் பிள்ளைகளுக்குமட்டுமே திறக்கப்படும். கிராமிய பாடசாலைகள் என்ற மாணவர் தங்குமிடங்களிலிருந்து ஒவ்வொரு சாதாரண மாணவனும் தத்தமது பெற்றோர்களின் தொழில்கட்கு அனுப்பப்படுவார்கள். அதாவது வர்ணசிரம கல்விமுறை என்று கூறப்படும் குலத்தொழில்களுக்கு ஒவ்வொரு சாதாரண மாணவனும் விரட்டப்படுவான.

உயர் வர்க்கத்தினரின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காகவும் உழைக்கும் வர்க்கத்தை மென்மேலும் அமுக்குவதற்காகவும் கொண்டுவரப்பட்டுள்ள கல்வி வெள்ளை அறிக்கை நாட்டின் பலபாகங்களிலும் இனப்பூசல்களை உருவாக்குவதற்கான ஒரு களமாகவும் தேவையைப் பொறுத்துப் பாவிக்கப்படும்.

யூ.என்.பி. பதவிக்கு வந்ததும் இவ்வாறு ஒரு தொழில் வெள்ளை அறிக்கையைக் கொண்டுவந்து அதை நிறைவேற்ற முடியாமல் போனதும் பலருக்கு நினைவிருக்கலாம். அத்தொழில் வெள்ளை அறிக்கை முற்றுமுழுதாகத் தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகள் அனைத்தையும் பறித்து அப்பட்டமான அடக்கு முறைக்கான ஒரு வெள்ளை அறிக்கையாகவே இருந்தது ஆனல் இறை கல்வி வெள்ளை அறிக்கையானது தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினர், கீழ்நடுத்தர வர்க்

( [illegible]ம் பக்கம் பார்க்க)

# ஜே. ஆர். அடுத்ததேர்தலுக்கு சுற்றுலா தொடங்கி விட்டார்!

இந்த ஆண்டை தேர்தல் ஆண்டாக ஏற்கனவே யூ.என்.பி.பிரகடனம் செய்ததற்கு இணங்க தனது தேர்தல் பிரசாரத்தைஅரசு ஆரம்பித்து விட்டது. இதில் ஜனதிபதியான ஜே. ஆர்.ஜெயவர்த்தன அதிக அக்கறை காட்டி நாட்டின் பல பகுதிகளுக்கும் நேரடி விஜயம்செய்து உரைகளை ஆற்றி வருகிருர்.

கடந்த நாலரை ஆண்டு கால ஆட்சியில் மக்களுக்கு இழைக்கக்கூடிய அதிகபட்ச அநீதிகளை எல்லாம் யூ.என். பி. ஆட்சியும் ஜே. ஆர். ஜயவர்த்தனவும் இழைத்து விட்டார்கள். அந்நிய ஏகபோக முதலாளிகளுக்கு நாட்டைத் தாரை வார்த்தது முதல் மக்களுக்கு இருந்த சகல மானியங்களையும் இல்லாமல் செய்து வாழ்க்கைச் செலவை வானளாவ அதிகரிக்கச் செய்ததுவரை; பொதுத் துறைகளை சீரழித்து தனியார் துறைகளுக்கு ஊக்கம் கொடுத்தது முதல் தொழிலாளிவர்க்கத்தை அடக்கிப் பழிவாங்கியது வரை; மக்கள் விரோத—ஜனநாயக விரோத சட்டங்களை இயற்றியது முதல் இனவாதத்தைத் தூண்டி மக்கள் மத்தியில் பிளவுகளையும் பேதங்களையும் கொண்டுவந்ததுவரை யூ. என். பி. ஆட்சி மக்கள் விரோத நடவடிக்கைகளில் மூழ்கிஎழுந்துள்ளது. இத்தனையையும் செய்துவிட்டு வெட்கம் கெட்டமுறையில் மறு தேர்தலுக்கான பிரசாரத்தில் இறங்கியுள்ளது.

பல கட்சிகள் பெயரளவுக்கு இருந்துவிட்டுப் போகட்டும். ஆனல் எந்தவகையிலும் யூ. என். பி. யைத் தவிர வேறு எந்தக் கட்சியும் எதிர்காலத்தில் அதிகாரத்திற்கு வந்துவிடக் கூடாது என்பதில் ஜே ஆர். ரும் யூ. என்.பி.யும் மிகக் கூர்மையுடன் நடந்துகொள்கின்றனர். இதற்காக அவர்கள் எதை வேண்டுமானுலும் செய்யத் தயாராக உள்ளனர். அதன் அடிப்படையிலேயே அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டுவந்ததுமுதல் தன் எதிரே இருந்த அடுத்த பலமான கட்சியான சுதந்திரக் கட்சியின் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் குடியியல் உரிமைகளைப்பறித்து அக்கட்சியைச் சிதறடிக்க முனைந்தது வரை விஷயங்களை செய்து வந்துள்ளனர்.

இத்தனையையும் செய்து முடித்துவிட்டு இப்பொழுது அவர்கள் மக்கள்முன் என்ன கூற முற்படுகிருர்கள். தாங்கள் செய்தவை யாவும் நியாயமானவையே என்று தமது கொடூரங்களை நியாயப்படுத்த முற்படுகின்றனர். தாங்கள் மக்களுக்குஇழைத்த அநீதிகளை மக்கள் நினைவில் வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் பழைய சிறிமா

( 8 ஆம் பக்கம் பார்க்க )


உள்ளே ...............

★ வெள்ளை அறிக்கையுங் கூட்டணியும்
★ யாழ். எம். பி. அஞ்ஞாதவாசம்
★ புத்தூரில் சாதிவெறி தாண்டவம்
★ மாசேதுங் அவர்களின் சர்வதேச முக்கியத்துவம்
★ மலையகச் செய்திகள்
★ பாரதியார் கவிதை - சிறுகதை


# பரந்தன் தொழிலாளர்கள் பழிவாங்கப்படுகிறார்கள்!

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையைச் சேர்ந்த முன்னூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடந்த நவம்பர் மாதம் 27ம் திகதியில் இருந்து ஒருவேலை நிறுத்தப் போராட்டத்தை நடாத்தி வருகின்றனர். தொழிற்சாலை நிர்வாகத்தின் திட்டமிட்ட தொழிலாளர் விரோத நடவடிக்கையை எதிர்த்து நான்கு கோரிக்கைகளை முன்வைத்தே மேற்படி வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது. இரண்டு மாதங்கள் கடந்த பின்பும் இவ்வேலைநிறுத்தத்தை நியாயபூர்வமான வழிகளில் முடிபுக்குக் கொண்டுவராமல் நிர்வாகம் வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களைப் பழிவாங்கி வருகிறது. இப் பழிவாங்கலில் யூ.என்.பி. அரசு கடைப்பிடித்துவரும் தொழிலாளி வர்க்க விரோத நிலைப்பாட்டுடன் இனவாத புறக்கணிப்பும் இணைந்துள்ளதைக் காண முடிகிறது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் தொழிலாளர்கள் ஏற்கனவே பல தொழிற்சங்கப் போராட்ட இயக்கங்களை நடாத்தி பல கோரிக்கைகளை வென்றெடுத்தவாகள். அவர்களது ஐக்கியத்தைக் குலைத்து தமது நோக்கங்களை நிறைவேற்றவே நிர்வாகம் தொழிற்சங்கம்மீதும் அதன் நிர்வாகிகள் மீதும் பழிவாங்கல்களை நடாத்திவருகிறது. ஆனல் தொழிலாளர்கள்மீது நடத்தும் எந்தப்பழிவாங்கலும் வெற்றிபெறப்போவதில்லை. இறுதியில் வெற்றிபெறுபவர்கள் தொழிலாளர்கள் என்பதை தன் கையாலேயே தனக்கு மண் அள்ளிப்போடும் யானை யூ.என்.பி. எங்கே உணரப்போகிறது. ஆனல் உணரும் காலம் அதிக தூரத்திலில்லை

இவ்வேலை வேலைநிறுத்தம் செய்துவரும் பரந்தன் தொழிலாளர்களுக்கு நாட்டின் சகலபகுதித் தொழிலாளர்களும் தமது ஆதரவைத் தெரிவித்து அவர்களது நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க சகலவித ஒத்துழைப்பையும் வழங்குவது அவசிய மாகும்.

# கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

# கல்வி வெள்ளையறிக்கையும் கூட்டணித் தலைமையும்

கல்வி சம்பந்தமான வெள்ளை அறிக்கை வெளிவந்த பின் இப்பத்திரிகையில் அது குறித்து விமர்சித்து எழுதியிருந்தோம். வர்க்கரீதியாக வாய்ப்புகள் உள்ளவர் வர்களுக்கே மேலும் வாய்ப்புகள் கிடைக்கும் வகையிலேயே அறிக்கையில் சிபார்சுகள் அமைந்துள்ளன என்பதை இப்பொழுது பலரும் உணரத் தொடங்கியிருக்கின்றனர். அடிப்படையில் அறிக்கையின் சிபார்சுகள் மூன்று விஷயங்களை முன் வைக்கின்றன.

(1) இலவசக் கல்விக்கு உலை வைத்தல் (2) தனியார் துறைப் பாடசாலைகளுக்கும் மதரீதியான பாடசாலைகட்கும் முதன்மை அளித்தல் (3) ஆங்கிலத்தைக் கட்டாய பாடம ஆக்குதல். இவை மூன்றினதும் விளைவாக பல்கலைக்கழகத்துக்கும் உயர் கலவிக்கும செல்வோரின் தொகையை வெகுவாகக் கட்டுப்படுத்திக் குறைப்பதே மறைமுகமான நோக்கமாகும். பள்ளிக்கூடங்களில் எட்டாம் வகுப்பினும் பத்தாம் வகுப்பிலும் மாணவர்களைத் 'தரம்' பிரித்து தொட்டாட்டு வேலைகளுக்கும் கைப்பணி வேலைகட்கும், 'மெக்கானிக்' தொழில்கட்கும் பெரும்பாலானோரை அனுப்பிவிட்டு பணவசதியும், ஆங்கிலமொழியறிவும் உயர்குடும்பப் பின்னணியும் படைத்த சில நூற்றுக்கணக்கானோருக்கே பல்கலைக்கழகக்கல்வி வழங்குவது அரசின் நீண்ட காலத்திட்டமாகும். குறைந்த அறிவு உள்ளவர்களாகக் கருதப்படுபவர்களை பள்ளிக்கூடங்களிலேயே வேறு திசைகளில் திருப்பிவிடுவதன்மூலம் உயர்வர்க்கத்தின் வாய்ப்புக்களைத் தொடர்ந்துபேணுவது கல்வி அறிக்கையின் இறுதி இலட்சியமாகும். சாதிமுறையையும் மறைமுகமாகக் கட்டிக்காப்பது அரசின் முயற்சி. இவ்வளவு தீமைகளும சூழ்ச்சிகளும் பொதிந்துள்ள அறிக்கைக்குப் பொதுவில் மாணவர் உலகத்திலிருந்தும் பொதுசனங்கள் மத்தியிலும் உணர்ச்சிபூர்வமான எதிர்ப்பு எழுந்திருப்பது நியாயமானதும் எதிர்பார்க்க வேண்டியதுமாகும். பாசிசப்போக்கில் நடந்துகொள்ளும் ஜனாதிபதியையும் அவரின் நெருங்கிய அமைச்சர்களையும் ஆலோசகர்களையும் தயங்க வைக்கும் அளவிற்கு எதிர்ப்பு இருப்பது கவனிக்கக்கூடியதாகும்.

நாம் அடிக்கடி இப்பகுதியில் எழுதியிருப்பதுபோல இந்த நாட்டு மக்களுக்குப் பெருமைப்படத்தக்க அளவு ஏகாதிபத்திய — முதலாளித்துவ எதிர்ப்பு உணர்ச்சியும் அனுபவமும் உண்டு. திரிபுவாத — டிரொஸ்கிய மாயைகளினால் சில சமயங்களில் தவறாக நடாத்தப்பட்டிருப்பினும் மொத்தத்தில் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்ப்பதில் இந்நாட்டு மக்கள் தயக்கம் காட்டியதில்லை. குறிப்பாக முதலாளித்துவக் கட்சியான யூ.என்.பி. பதவிக்கு வந்த காலங்களிலெல்லாம் மக்கள் எத்தனையோ சட்டங்களுக்கும் நிபந்தனைகட்கும் முகங்கொடுக்கவேண்டியவர்களாக இருந்திருக்கிறார்கள். அதன் வெளிப்பாட்டையே இப்பொழுது எழுந்திருக்கும் எதிர்ப்பிலும் காண்கின்றோம். இதனை வளர்ப்பதும் வர்க்க அடிப்படையில் தேசவிசாலமான ஒற்றுமையை உருவாக்குவதும் தேசபக்த — புரட்சிகரசக்திகளின் தலையாய பொறுப்பாகும்.

மூர்க்கத்தனமான எதிர்த்தாக்குதலை மாணவர்மீது அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்ட இவ்வேளையில் யூ. என். பி.யின் இளைய பங்காளர்களான தமிழர் வியாபாரக்கூட்டணியினர் இவ்விடயத்தில் நடந்துகொண்டுள்ளவிதம் அப்பட்டமாக அவர்களின் வர்க்கச்சார்பைக் காட்டுவதாவுள்ளது. குறிப்பாக நாளுக் நாள் தளர்ந்துபோகும் தள(ர்)பதி அமிர்தலிங்கத்தார் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையில் வெள்ளையறிக்கைபற்றிப் பட்டுப்படாமலும் நழுவலாக பேசியது ஆச்சரியத்தை உண்டுபண்ணத் தேவையில்லை. சம்பிரதாயத்துக்கு இரண்டொரு குறைகளைக் குறிப்பிட்டுவிட்டு ஆங்கில மொழிக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தைத் தாம் வரவேற்பதாக கூறி முடித்தார். இதுகூட்டணி வட்டாரங்களிலேயே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதாம். 'ஜே.ஆர். ஆளை விலைக்கே வாங்கிப் போட்டார் போலயிருக்கு'' என்று பழுத்த கூட்டணி ஆசிரியர் ஒருவர் மனம் வெதும்பிக்கூறியதைக் கேட்க முடிந்தது ஒருகாலம் வாத்தியாராக இருந்ததோஷத்தினாலோ அல்லது அமிர்தலிங்கத்திலிருந்து வேறுபட்டு பேசவேண்டுமென்ற உள் முரண்பாட்டுக் காரணத்தினாலோ அல்லது வேறு ஏதாகிலும் காரணத்தினாலோ பண்டிதர் இரத்தினம் சற்றுக் கூர்மையாக வெள்ளையறிக்கையை விமர்சித்தார். குறிப்பாக அது இலவசக் கல்விக்குச் சாவுமணி அடிக்கப் போவதை அவர் சுட்டிக் காட்டினார். ஆனால் மொத்தத்தில் வியாபாரக்கூட்டணி வெட்கம் ரோசமின்றி அரசாங்கத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரித்து 'சான்றிதழ்' வழங்கும் வகையிலேயே பேசியது. பாராளுமன்றத்திலே அரசுக்கு விசுவாசமான எதிர்க்கட்சியாக அல்ல, அரசு தரப்பினர் போலவே அண்மைக் காலத்தில் கூட்டணியினர் நடந்து கொள்வது கவனிக்கக் கூடியதே. சிறுச்சிறு சலுகைகள் எவ்வளவு வலிமைவாய்ந்தன!

பாராளுமன்ற சீசனில் கொழும்பில் 'காம்ப்' அடித்து தொடர்ந்து சனாதிபதியின் வசந்தமாளிகையில் பேச்சுவார்த்தைகள் நடாத்தும் அமிர்கும்பல், யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த சில தினங்களில் வெள்ளை அறிக்கை சம்பந்தமாக பேச்சுகளும் நிகழ்த்தினர். அப்பொழுது எல்லா வேலைகளையும் தாம் செய்ய இயலாதென்றும் கல்வி சம்பந்தமான விடயங்களைப் பொதுமன்றங்கள் கவனிக்க வேண்டும்என்றும் பெரிதாகப் பேசித் தப்பிக் கொள்ள முயன்றனர். பல்கலைக்கழகப் புகுமுகதேர்வு தரப்படுத்துதல், திறமையின் அடிப்படையில் தேர்வு — தெரிவு முதலியவற்றை வைத்து சில வருடங்களாக அரசியல் சர்க்கஸ் ஆடிவந்த கும்பலுக்கு இப்பொழுது திடீரென கல்வி வெள்ளை அறிக்கை முக்கியத்துவம் இழந்துகாணப்படுவது வேடிக்கைதான். இதைவிடப் பலவழிகளிலும் சிறந்த 1972ம் வருடக் கல்விச் சீர்திருத்தத்தை முழுமூச்சாக எதிர்த்த கொழும்புவாசி சிவசிதம்பரத்துக்கு யூ. என். பி. அரசின் வெள்ளையறிக்கை பல 'நல்ல அம்சங்களையும் கொண்டதாக' இருப்பதும் வேடிக்கைதான், சலுகைகளும், உல்லாசப் பயணங்களும் பேரங்களும் அவர்களின் வாய்களுக்கு 'மூடி' போட்டது மட்டுமல்ல அவர்களின் ஆன்மாவையே கொன்றுவிட்டன என்று கூட்டணி சார்பு தமிழாசிரியர்கள் சிலர் அண்மையில் பேசிக் கொண்டது நினைவுக்கு வருகிறது.

ஒருவிதத்தில் வியாபாரக் கூட்டணித் தலைவர்கள் கல்வியில் சீரான அக்கறை காட்டாததற்கு நாம் கோபம் கொள்ளவும் முடியாது. ஏனெனில் அவர்கள் எல்லோரின் பிள்ளைகளுமே இந்த நாட்டில் உயர்கல்வி பெறாதவர்கள். இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் படித்தவர்கள்; படிப்பவர்கள். பழைய கறள் கட்டிய 'இரும்பு' மனிதன் நாகநாதனிலிருந்து இன்றைய வீரவாள் தலைவர்கள் வரை கிட்டத்தட்ட அனைவரின் பிள்ளைகளும் அந்நிய நாடுகளில் ஆங்கில மொழியில் கல்வி கற்றவர்கள்; கற்பவர்கள். மாஜிக்கூட்டணிப் பிரமுகர் இராசதுரையின் பிள்ளையும் அப்படியே. தற்சமயம் அமிர், தருமர், நவம், சங்கரி முதலியோரின் பிள்ளைச் செல்வங்கள் வெளிநாடுகளிலே உள்ளனர். (அரசியல் தலைமையையும் அங்கு பெறப் பாடுபடுகின்றனராம்) எம். ஜி.ஆர்.தயவால் நெடுஞ்செழியன் புண்ணியத்தால் அமிரின் 'சின்னப்பொடியன்' மதுரைப்பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரியில் படிக்க வாய்ப்புக்கிடைத்துளது, பின்னர் தமிழ்த் தலைவர்களுக்கு இந்நாட்டு உயர் கல்வியில் உண்மையான ஈடுபாடு ஏன் இருக்கவேண்டும்? அரசியல் தேவைகட்காக அவ்வப்போது ஆவேசக் குரலில் நடிப்பதை விட வேறு அவசியம் இல்லையே. தேவை ஏற்பட்டால் தருமலிங்கம் போன்றவர்கள் ரஷ்ய உபகாரச் சம்பளத்திலும் தமது பிள்ளைகளை, உற்றார் உறவினர் பிள்ளைகளையும் அனுப்பியிருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. தந்தை செல்வாவின் ஞானப்புத்திரனும் மருமகனுமாகிய புரோக்கர் வில்சனும் மனைவியும் கனடாவில் குடியேறியவர்கள். காண்டியன் கல்யாணம் முடித்து குடும்பம் நடாத்துவது இலண்டனில். பின் இலங்கையின் கல்வியில் இவர்களுக்கு ஏன் அக்கறைவரும்? யூ.என்.பி.யின் பக்கப்பாட்டுக்காரராக தலையாட்டி வருவதில் தனி மகிழ்ச்சி பெற்றுவரும் அமிர்கும்பலை தமிழ் மக்கள் இனம்கண்டு தூக்கி எறியும் காலம் வரத்தான் செய்யும்.

★

## யாழ் எம்.பி. அஞ்ஞாதவாசத்திற்கு அனுப்பப்படுவாரா?

வெளி நாடுகளைப்பற்றிப் பேசுகையில் கூட்டணிப் பிரமுகர் வெ.யோசேஸ்வரன் பற்றிய நினைவும் வருகிறது. கட்சிக்கும், இளைஞர்களுக்கும் பாலமாக இருப்பவராக வருணிக்கப்படும் யோசேஸ்வரன் விரைவில் இங்கிலாந்திற்குச் செல்லப் போவதாகவும் அங்கு நீண்ட காலம் தங்கிவிடப்போவதாகவும் காதோடுகாதாய்ப் பல இடங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது. இதற்கான காரணங்கள் பலவாறாகக் கூறப்படுகிறது. பல்வேறு காரணங்களினால் யோகேஸ்வரன், சற்று 'தீவிரமான' போக்கை கடைப்பிடிப்பவராக காட்டுவது உண்மையே. வயது குறைவு என்ற காரணமும் அனுபவக் குறைவும் அவரை தலைமையின் விமர்சகராக ஆக்கியிருக்கலாம். விமர்சனம் அடிப்படை விடயங்களில் அல்ல, நடந்துகொள்ளும் விதத்தில்தான். அமிர் ஜனாதிபதியுடன் நடாத்திவரும் இரகசியப் பேச்சு வார்த்தைகளில் யோகேஸ்பற்றி விவாதிக்கப்பட்டதாம். சுமுகமான உறவுகளை வளர்த்துக் கொள்வதற்காக 'தீவிர' யோகேசை அஞ்ஞாதவாசத்துக்கு அனுப்ப அமிர் இணங்கியிருப்பதாகவும், இங்கு கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

ஆனால் விடயத்தை மூடி மறைக்கும் வகையில் அமிர் 'கதையொன்றை'க் கட்டிவிட்டிருக்கிறாராம். வைகுந்தவாசன் முதலிய விஷமிகளின் கொட்டத்தை அடக்குவதற்கும், கூட்டணியின் கிளைகளை ஸ்திரப்படுத்தவும் இலண்டனில் ஆமான ஆள் ஒருவர் அவசியம் தேவைப்படுகிறது என்றும், அதற்காகவே யோகேஸ்வரன் அங்கு சில காலம் போய் தங்கியிருப்பார் என்றும் அமிர் கூறுகின்றாராம். ஆனால் உண்மையில் கழுத்தறுப்பே என்று அந்தரங்கம் அறிந்தவர்கள் கூறிக்கொள்கிறார்கள்: தனது 'தேவைக்காக' பிரதமர் பிரேமதாசாவின் வாலைநறுக்கி அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்த ஜனாதிபதி முயற்சிகள் எடுப்பதுபோல, ஜே. ஆர்.ரின் நண்பன் அமிர்தலிங்கம் தம்பி யோகேசையும் கைவிடத் தயங்கமாட்டார் என்பதே அரசியல் அவதானிகளின் அபிப்பிராயமாகும். யோகேஸ் இளைஞர்மத்தியில் சற்று பிரபல்யத்துடன் இருப்பதும் அமிருக்கும் அவர் குடும்பத்தினருக்கும் பிடிக்கவில்லை என்பதும் கூட்டணி வட்டாரங்களில் பிரசித்தமாகும்.

★

## எரிந்த நூலகத்தில் பிடுங்க முயற்சியா?

யாழ்ப்பாணம் பொது நூலகம் இனவாதக் குண்டர்களால் எரிக்கப்பட்டது தமிழ் மக்களிடையே ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் எழுப்பியது உண்மையே. அநாகரிகத்தனமான அந்த நிகழ்ச்சியையும் தமக்கே கைவந்த வழியில், அரசியல் வியாபாரத்துக்காக கூட்டணித் தலைமை பயன்படுத்தி வருகிறது. யதார்த்த நிலைமைக்கு முரணான வகையில் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவில் "புதிய" நூலகக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட வேண்டும என்று மேயர் விசுவநாதனும் அவரைச் சார்ந்த வால்பிடிகளும் வற்புறுத்திவருகின்றனர். எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் பந்தயபிடித்து கட்டிட கொந்தராத்துப்பெறும் கட்டிடகலைஞர் ஒருவர் இலவசவரைபடம் தீட்டிக் கொடுத்து கட்டிட சொந்தராத்தை தான்பெற உள்ளாராம். மிகுதியை விபரிக்கத் தேவையில்லை. பணத்தில் மசியாறவா பிரமுகர்களுக்குப் பஞ்சம்?

இப்பிரச்சனை இப்பொழுது சூடுபிடிக்க ஆரம்பித்துளது. இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள பலர் நூலகக் கட்டிடத் திட்டத்துக்குப் பணம் நன்கொடை செய்வதிலும் பார்க்க நூல்களாகவே வழங்க விரும்புகிறார்களாம். இந்த அடிப்படையிலேயே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் அவை தாம் சேகரித்த பணத்தை நூல்களாகவே வழங்க முடிவு செய்திருப்பது பலருக்கு நினைவிருக்கும். இந்த நன்முன்மாதிரியை பலர் பின்பற்றவிரும்புகின்றார்களாம். இது மேயருக்கும், கட்டிடகலை நிபுணருக்கும், உள்ளூர எரிச்சலையும் சோபத்தையும் உண்டாக்கியுளதாம். காசு நன்கொடையாக வருவதையே அவர்கள் விரும்புகின்றனராம். பொதுவாக கொழும்பிலும் வேறு இடங்களிலும் இதுசம்பந்தமாக ஒலிக்கும் குரல்களைக் கேட்டால் கட்டிடக் கொந்திராத்துக்காரருக்குக் கொட்டிக் கொடுப்பதை விட அடக்கமான ஒரு கட்டிடத்தில் நல்ல பயனுள்ள நூல்களைப் பெருமளவில் வைத்திருப்பதே சிறந்த செயலென பலரும் கருதுவது புலப்படும். ஆனால் தாம் பிடித்ததையே சரியென்று சாதிக்கும் கூட்டணிக் கும்பலுக்கு இது எங்கே விளங்கப் போகிறது? நூல்களைப்பற்றி யாருக்கு கவலை? கவலையாவும் காசைப்பற்றியே.

★

## போலந்தில்
# ரஷ்ய - அமெரிக்காவுக்கு என்ன வேலை?

### ஒரு நாட்டின் தலைவிதியை அந்நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்!

கடந்த சில வாரங்களாக போலந்து விவகாரம் உலகமக்களின் கவனத்தை ஈர்த்து வந்துளது. அதிமுக்கியமான அரசியல் பிரச்சினையாகவும் சோக நாடகமாகவும் போலந்து விவகாரம் அமைந்துளது. மத்திய ஐரோப்பிய நாடுகள் அனைத்துள்ளும் போலந்தே வரலாற்றில் அதிகம் துன்ப துயரங்களுக்கு உட்பட்ட நாடு என்று கூறுவது தவறாகாது. தேசிய பிரச்சினை தீவிரமடைந்த காலத்திலிருந்து அதாவது இரண்டு மூன்று நூற்றுண்டுகட்கும் மேலாக போலந்து அயல் நாடுகளின் இடையறுத செல்வாக்கிற்கும் அச்சுறுத்தல்கட்கும் ஆளாகியிருக்கின்றது. ஆஸ்திரிய அரசு, ரஷ்ய ஜார் அரசு பிற்பட்ட ஜெர்மனிய அரசு முதலியன போலந்தை கூறுபோடுவதிலும் தமது செல்வாக்கு வட்டத்திற்குள் வைத்திருப்பதிலும் போட்டியிட்டு வந்தன.

இரண்டாவது உலகயுத்த காலத்தில் பாசிஸ்டு ஹிட்லரின் படுமோசமான—அரக்கத்தனமான — அடக்குமுறைக்கு இலக்காகியது. போலந்து தேசம் விடுதலை பெற்று குறிப்பிட்ட சில காலத்துக்குப் பின்னர் சோவியத் செல்வாக்கிற்கு இரையாகியது. இதன் விளைவாகச் சோஷலிசத்தையே சந்தேகிக்ககூடிய விபரீதமான உணர்வுகள் போலந்துப் பொதுமக்களிடையே எழுந்துள்ளன. சோவியத் சமூக ஏகாதிபத்திய காலகட்டத்தில் மற்றைய கிழக்குஐரோப்பிய நாடுகளிலும் பார்க்கப் போலந்தே பொருளாதாரப் பிரச்சினைகளைக் கூடுதலாக அனுபவித்து வந்திருக்கிறது. சோவியத்—போலந்து உறவுகள் மக்கள் மட்டத்தில் பகைமுரண்பாடாக முற்றும் அளவிற்கு வளர்ந்துளது.

இத்தகைய சூழ்நிலையில் வல்லரசுகளின் போட்டா போட்டி காரணமாக அமெரிக்க — மேற்கு ஐரோப்பிய சக்திகள் போலந்தில் மறைமுகமாக தலையிட்டு வருகின்றன என்பதையும் மறுக்க இயலாது. மதபீடமும் சில பிரச்சினைகளுக்குக் காரணமாக இருந்து வந்திருக்கிறது. யாவற்றுக்கும் அடிப்படையில் போலந்து தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியப்பட்ட ஆதரவு பதவியிலுள்ள திரிபுவாத ஆட்சிக்கு இல்லை என்பது வெளிப்படை. பலவகையான முரண்பாடுகள் கூர்மையடைந்திருக்கின்றன.

வரலாறு காட்டிவந்திருப்பதுபோல போலந்துமீண்டும் மீண்டும் அயல் சக்திகளின் பகடைக்காயாக உருட்டப்படுகிறது. துன்பப்படுவது போலந்து மக்கள்தான். உண்மையில் றீகனின் பொருளாதாரத் தடைகளோ, பிரெஷ்னெவின் இராணுவ பயமுறுத்தல்களோ பாப்பாண்டவரின் 'பரிசுத்த' வழிபாடுகளோ ஐ.நா. பொதுச் செயலாளரின் இராஜதந்திர நடவடிக்கைகளோ இன்று போலந்துப் பிரச்சினைகளின் தீர்வுக்கு எள்ளளவும் உதவப் போவதில்லை. குறிப்பாக அந்நிய தலையீடுகள் எந்த விதத்திலும் பயனளிக்கப் போவதில்லை. இறுதி ஆய்வில் போலந்து மக்களே தமது பிரச்சினைகளுக்கு விடிவு காணவேண்டும்; காண்பார்கள்.

— உதயன் —

# புத்தூரில்- சாதிவெறி தாண்டவம்!

வடக்கே வாழும் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை இன்றும் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலே காணப்படுகின்றது. அவர்களின் மனித உரிமைகள் மறுக்கப்படுவது மட்டுமன்றி சாதிவெறியின் கோரத்தால் தாக்கப்படுவதும் தொடர்கின்றது. இந்த மக்களின் நிர்க்கதியான நிலையை பாராளுமன்ற ஆசனத்தாலோ அன்றி மாவட்ட சபை அங்கத்தவத்தாலோ அல்லது ஒரிரு 'சமாதான நீதிபதி'ப் பட்டங்களாலோ மாற்றிவிட முடியாது. அப்படியான பதவிகளைப் பெற்றவர்களைத் தமது பக்கத்தில் வைத்துக்கொண்டு மேலும் தாழ்த்தப்பட்ட மக்களை புதிய புதிய வழிகளில் அடக்குவதையே சாதிவெறியர்கள் செய்துவருகின்றனர்.

அண்மைக் காலங்களில் வடபகுதியின் பலவிடங்களில் சாதிவெறி தலைவிரித்தாடியுளது. பாடசாலைகளில், காரியாலயங்களில், கோவில்களில் தேநீர்கடைகளில் மற்றும் பொது இடங்களில் இவை நடந்துள்ளன. இவைபற்றி அவ்வப்போது மக்கள் குறிப்பாக இளைஞர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)யின் கவனத்திற்குக் கொண்டு வந்து முறையீடுகளை செய்து உள்ளனர். இதில் ஒன்றே புத்தூர் சம்பவமாகும். இரண்டு உயர்சமூகம் எனப்பட்டவர்களுக்கு இடையில் ஏற்பட்ட பிணக்கில் அனாவசியமானமுறையில் ஒருதாழ்த்தப்பட்ட இளைஞர் புத்தூர் மேற்குப் பகுதியில் மோசமாகத் தாக்கப்பட்டார். அவ்விளைஞன் ஏன் தாக்கப்பட வேண்டுமென்று நியாயம் கேட்க முனைந்தபோது ஏனையோரையும் தாக்க சாதிவெறியர்கள் ஆள்சேர்த்து காஷ்டியாகினர். அது மட்டுமன்றி நாளாந்தக்கூலி வேலைகளுக்குச்சென்ற பெண்கள், சிறுவர்கள் வயதுவந்தோர் விரட்டப்பட்டனர். முக்கியமாக தமது உணவு முத்திரைகளுக்கான உணவுப்பொருட்களை வாங்கச்சென்ற அப்பகுதி மக்கள் தமது உணவுப்பொருட்களைப் பெறமுடியாத நிலைக்குத் தடுக்கப்பட்டனர். இவ்வாறு சாதிவெறி புத்தூர்ப் பகுதியில் தலைவிரித்தாடியது. 'அடித்தால் அடியைவாங்கிக் கொண்டு அந்த காலம்போல் இருந்தால் என்ன? இவங்கள் என்ன நியாயம் கேட்கிறது'' என்ற நிலையில்தான் இப்புத்தூர்ச் சாதிவெறிக் கூட்டம் இருக்கிறது.

ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரை இனிமேலும் பொறுப்பதற்கு இல்லை என்ற நிலை எப்போதோ ஏற்பட்டுவிட்டது என்பதை அச்சாதிவெறிக் கூட்டம் இன்றும் அறியாதுஇருப்பது அறியாமையே யாகும்.

புத்தூர்ப் பகுதியின் தாழ்த்தப்பட்ட மக்களும் ஏனைய பகுதி மக்களில் பெரும்பகுதியினரும் நிலவுடைமையின் கொடுமையால் வாட்டி வதைக்கப்பட்டவர்கள். இன்றும் அப்படியே. அதிலும் புத்தூர் மேற்கு பகுதி மக்களை புத்தூர் நில உடைமை கொண்ட ஒரிரு குடும்பங்கள் தமது அடிமைகள் என்ற நினைப்பிலே நடாத்திவந்துள்ளன. ஆனால் அடக்குமுறையும், அடிமைப்படுத்தலும் நீண்ட காலம் நீடிக்கமாட்டாது. மக்கள் தமது அடிமை விலங்கை அறுத்தெறிய முற்பட்டால் பிற்போக்கு சாதிவெறியர்கள் மக்களின் முன் வெறும் தூசுகளேயாவர். இதையே கடந்த காலத்தில் சங்கானை, கரவெட்டி, மந்துவில், கொடிகாமம், அச்சுவேலி, எழுதுமட்டுவாள் போன்ற பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடைமுறைப்படுத்திக் காட்டினர். தாழ்த்தப்பட்ட மக்களின் வியர்வையாலும் இரத்தத்தாலும் சொத்து சேகரித்து சுகபோகம் நடாத்திவரும் ஒரு சிலர் ஆயிரக்கணக்கான மக்களை சாதியின் பெயரால் — நிண்டாமையின் பெயரால் அடக்குவதை இனிமேலும் யார்தான் பொறுத்துக்கொள்வர். இதற்கு ஒரே வழி கம்யூனிஸ்ட்கட்சிகடந்த காலத்தில் காட்டிய போராட்ட வழி மட்டுமேயாகும் ஏனைய வழிகள் தாழ்த்தப்பட்ட மக்களை ஏமாற்றிப் பழைய நிலையைத் தொடரவே செய்யும்.

இன்று புத்தூரில் சாதி வெறியாட்டம் ஆடும் கூட்டத்தினரை உற்றுநோக்கின் இவர்கள் தனித்தமிழ் ஈழத்திற்கு வாக்கு சேகரித்தவர்கள் என்பது புலனாகும். தேர்தல் வந்தால் வாக்குச் சேகரிக்க வந்து 'தேர்தல் கால சமத்துவம்' பேசும் இந்நபர்கள்தான் தேர்தல் முடிந்ததும் தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்குவதிலும் அடக்குவதிலும் முன்னிப்பார்கள். இந்த உண்மையை இன்று புத்தூர் வாழ் தாழ்த்தப்பட்ட மக்கள் நன்குணர்ந்து வருகின்றனர்.

உயர்சாதி என்று சொல்லப்படுவோர்கள் எல்லோரும் சாதி வெறியர்கள் அல்ல. அவர்கள் மத்தியிலுள்ள ஒரு குறிப்பிட்ட சிலரே இச்சாதிவெறியைப்பாராட்டி மக்களை அடக்க முயலுகின்றனர். தாழ்த்தப்பட்ட மக்கள்மீதும் அவர்களது நியாயமான உரிமைகள்மீதும் அனுதாபமும் அக்கறையும் கொண்ட நல்லெண்ணம்படைத்த உயர் சமூக வாலிபர்களையோ அன்றி மக்களையோ நாம் கண்டிக்கவில்லை; நாம் கண்டிப்பது சாதி வெறியர்களை மட்டுமேயாகும்.

கடந்த காலங்களில் போராட்டங்களின்மூலம் தமது உரிமைகளை நிலைநிறுத்திய போராட்ட சக்திகளோடும், அதற்கு உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும் செயல்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியுடனும் புத்தூர்வாழ் தாழ்த்தப்பட்ட மக்கள் உறுதியாகக் கைகோர்த்து முன்செல்வார்களேயானால் அவர்களை எத்தகைய சக்தியாலும் அடக்கவோ பயமுறுத்தவோ முடியாது.

# தமிழர் கூட்டணி

★ பாராளுமன்றத்தில் பதினன்கு உறுப்பினர்களும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும்

★ வடக்கு கிழக்கில் — யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய ஆறு மாவட்ட சபைகளில் 'அதிகாரம்' கொண்டவர்களும் கூட்டணியினரே

★ யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிர்வாகமும் திருகோணமலையின் நகரசபையினது நிர்வாகமும், ஏனைய பருத்தித்துறை, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பட்டினசபைகளினதும் நிர்வாகங்களும் தமிழர் கூட்டணியினரிடமே உண்டு.

★ யாழ். நகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாகமும் வடக்குக்கிழக்கின் அதிகப்படியான ப. நோ. சங்கங்களின் நிர்வாகங்களும் கூட்டணிஎனப்பட்டவர்களின் கைகளிலேயே உள்ளன.

★ வடக்கில் தெங்கு — பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களில் அதிகாரம் செலுத்துபவர்களும் கூட்டணியினரே.

★ வடக்கு கிழக்கின் சகல] அரசாங்க அதிபர்களும் கூட்டணியின் சிபார்சின்மீதே நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ அரசாங்க திணைக்கள உயர் அதிகாரிகள் தொட்டுப் பாடசாலை அதிபர்கள்வரை கூட்டணியின் விருப்பு வெறுப்பின்மீதே நியமனம் மாற்றம் இருந்து வருகின்றது.

★ தமிழ்ப்பகுதிக்கு நாற்பதுசதவீதப் பொலிசார் கூட்டணியின் விருப்பத்தின்பேரில் மாற்றம் செய்யப்பட்டு உள்ளனர்; அமையப்போகும் கிராமோதய சபைகளுக்கும் கூட்டணியின் சிபாரிசின்மீதே விசேட சேவை அதிகாரிகளும் நியமிக்கப்படவுள்ளனர்.

★ உத்தேசிக்கப்பட்டுள்ள ஊர்காவற்படைக்கும் கூட்டணியினரே நியமிக்கப்படுவர்.

★ யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நிர்வாகமும் தமிழர் கூட்டணியிடமே உண்டு.

இவ்வளவு இடங்களிலும் அதிகாரம் செலுத்தும் இத்தமிழா கூட்டணியினரால் பொதுவான நன்மைகளையும் வாய்ப்புகள் — சலுகைகளையும் பெற்றுவருபவர்களும், பெறப்போகின்றவர்களும் யார்? வசதிபடைத்த உயர் வர்க்கத் தமிழர்களா? அன்றி சாதாரண உழைக்கும்வர்க்கத் தமிழர்களா?

**தமிழ் மக்களே!**
**வர்க்கரீதியில் சிந்தித்துப்பாருங்கள்!**

## சிந்திக்கவேண்டிய செய்திகள்

★ சிங்கப்பூர் இராணுவத்தில் திருட்டுக்கள் பொதுவானவை; பாடசாலை மாணவர்களும் திருடுகின்றார்கள்; நாடு கள்வர் குகையாக மாறி வருகிறது.

—சிங்கப்பூர் கல்வி அமைச்சர்

★ ஆசிரிய நியமனம் ஐயாயிரம்பேருக்கு மட்டுமே. ஆனால் விண்ணப்பித்தோர் 75ஆயிரம்பேர். நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 35 ஆயிரம். மிகுதி 40 ஆயிரம்பேர். 5ஆயிரம் நியமனத்திற்கு போட்டிபோடுகின்றார்கள்.

—பத்திரிகை செய்தி

# மாசேதுங் அவர்களின் சர்வதேச முக்கியத்துவம்

மக்கள் சீனக் குடியரசு நிறுவப்பட்டது முதல் எமது கட்சியின் சரித்திரத்தில் சில பிரச்சினைகள் என்ற வரலாற்று ரீதியான தீர்மானத்தில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் மாஓவைப்பற்றி ஓர் கணிப்பீடு செய்துளது. இக் கணிப்பீடு குறிப்பாக 'மாஓ சேதுங் சிந்தனையும், தோழர் மாஓசேதுங்கின் சரித்திர பாத்திரமும்' என்ற தலைப்பில் உள்ள பகுதியில் இக் கணிப்பீடு செய்யப்பட்டுளது. மாஓ அவர்களின் பங்களிப்பும் சீனாவில் அவரது நடவடிக்கைகளும் என்ற பிரச்சனை சீனகம்யூனிஸ்ட் கட்சியினதும் சீனாவை வழிநடத்திய அவரது சிந்தனையினதும் பிரச்சனையாகும். சீனக்கம்யூனிஸ்டுகள் இத்தீர்மானத்தில அவரது சாதனைகளையும் தவறுகளையும் கணித்துள்ளனர். அவர் தனது இறுதிக் காலத்தில் செய்த தவறுகளை விட அவரது சாதனைகள் அளப்பரியன என்று அவர்கள் கூறியுள்ளனர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரத்தில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தெரிந்த, தெரியவேண்டிய, அவர்களுக்கு மட்டும் தெரிந்திருக்கவேண்டிய பல விபரங்கள் இருக்கின்றன. சீனகம்யூனிஸ்ட்கட்சிக்கு மட்டும் பிரத்தியேகமான பல பிரச்சினைகள் உள்ளன. அப்பிரச்சினைகளில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சிக்கு வெளியே சீனாவுக்கு வெளியே உள்ள எவருக்கும் தலையிட உரிமை கிடையாது.

## பாட்டாளி வர்க்கப் போதனையாளர்

தலைவர் மாஓ அவர்கள் உலகளாவிய முக்கியத்துவம் பெற்ற ஒருவராவர். அம் முக்கியத்துவம் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அக்கறைக்குரிய விடயமாகும். இவ் வியக்கத்தில் சீனகம்யூனிஸ்டகட்சி ஓர் மிக முக்கியமான அங்கமாகும். தலைவர் மாஓவின் படைப்புகள் பரந்தளவில் கற்றுக்கொள்ளப்பட வேண்டியவையாகும். அவர் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் மகத்தான போதனையாளர். நவீன காலத்தின் முதன்மையான போதனையாளரும் அவரே. சீனக்கட்சியின் தீர்மானம் குறிப்பிடுவதுபோல், "உலகின் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கும் மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கும் அவர் பிரதானமான பெரும் பங்களிப்பைச் செய்துள்ளார்".

## மாக்சிசலெனினிச பார்வையில் மாஓ

கம்யூனிசத்தின் விரோதிகள் தலைவர் மாஓ பற்றிய சில கருத்துரைகளையும், அவர் இறுதிக்காலத்தில் செய்த சில தவறுகளையும் சாதகமாக்கி தமது முற்றுப் பெருக கம்யூனிச எதிர்ப்புக்கு ஆயுதமாக்கிக்கொண்டனர். இவ்வாறாக தலைவர் மாஓ பற்றிய பிரச்சனை குழப்பத்திற்குள்ளாகியது. இது விவாதத்திற்கும் அபிப்பிராய பேதங்கட்கும் இடமளித்தது. உடனடியாக இது கம்யூனிசத்திற்கு பாதகமானதாய் இருந்தது. ஆனால் இறுதியில் கம்யூனிஸ்டுகளின் சிந்தனைகளில் தெளிவு ஏற்பட்டது. தலைவர் மாஓவை கண்மூடித்தனமாக ஆதரித்து அவர் மீது அபாரபக்தி கொண்டிருந்த சிலர் அவரிடம் நல்லது ஒன்றுமே இல்லை என்ற முடிவுக்கு வந்தனர். வேறு சிலர் அவரை விடாப்பிடியாக உயர்த்திப்பிடித்து அவருக்கு எதிராக எந்தக் கருத்தையுமே ஏற்க மறுத்து தீவிரமாய் நின்றனர். வேறு சிலர் குழப்பமடைந்தனர். ஏனையோர் முழுவிடயத்தையும் அலசி ஆராய்ந்து சிந்திக்கத் துணிந்தனர்.

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர் அல்லாதோர் அக்கட்சி சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றித் தீர்ப்புக்கூறுவது உகந்ததல்ல. அதேவேளையில் சீனக்கம்யூனிஸ்டுகள் கூறுவது யாவற்றையும் ஏனையோர் ஏற்றுக்கொள்ளவேண்டு மென்பதும் இல்லை. உதாரணமாக சீனக்கம்யூனிஸ்ட்கட்சியின் குறிப்பிட்ட ஒரு நடவடிக்கையை மையமாகக் கொண்டு அவுஸ்திரேலிய கம்யூனிஸ்ட்கட்சி தனது அங்கத்தவர்களின் தகுதியைக் கணிக்க முடியாது. எம்மைப் பொறுத்தவரை நாம் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியை பெரிதும் மதிக்கின்றோம். அவர்கள் மார்க்சிச—லெனினிச — மாசேதுங் சிந்தனையை கடைப்பிடிப்பவர்கள் என்றும் நம்புகின்றோம். அவர்களது சோஷலிசப் பாதையில்-பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் —கம்யூனிஸ்ட்கட்சியின் தலைமையில் எமக்கு நம்பிக்கை உண்டு.

## சர்வதேச ரீதியில் மாசேதுங்சிந்தனை

எமது அபிப்பிராயப்படி சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கு தலைவர் மாஓ அளித்த பங்கு அளப்பரியதாகும். இது உண்மையில் சர்வவியாபகமான பங்களிப்பாகும். அது பல கோணங்களில் காணப்படுகிறது. மார்க்சிச — லெனினிசத்தை அவர் சரியாக புரிந்துகொண்டதில் செயலுக்கு வழிகாட்டியாக அவர் அதனை உறுதியுடன் கடைப்பிடித்தமை இயங்கியல் பொருள்முதல் வாதத்தில் அவருக்கிருந்த அசைக்கமுடியாத நம்பிக்கை ஆகியன குறிப்பிடத்தக்கவை. அவரது பங்களிப்பு மார்க்சிச — லெனினிசத்தின் பொது உண்மைகளை சீனாவின் யதார்த்த நிலைமையுடன் ஒன்றிணைத்தது மட்டும் தானா? மாசேதுங் சிந்தனை சீனாவுக்குமட்டும்தான் உகந்ததா? எமது கருத்துப்படி குறிப்பாக அவர் மார்க்சிச லெனினிசத்தை சரியான முறையில் சீனாவின் யதார்த்த நிலைமையுடன் ஒன்றிணைத்தார். அவரது வாழ்க்கையும் செயல்களும் மகத்தான சர்வதேச கம்யூனிச முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். மேலும் அவர் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நேரடியான தன் பங்களிப்பைச் செலுத்தியுள்ளார்.

## மாக். தத்துவமும் கீழைத்தேச நிலைமைகளும்

லெனின் அவர்களது நடைமுறைச் சாதனைகள் ஐரோப்பாவைக் குறிப்பாக ருஷியாவை தழுவியதாயிருந்தன. மார்க்சும், ஏங்கல்சும ஜேர்மனியர்கள்; பிரதானமாக மேற்கு ஐரோப்பா பற்றி கவனம் செலுத்தினார்கள். ஸ்டாலின் ஓர் ருஷ்யர்; குறிப்பாக ருஷியாவில் சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் அக்கறைகொண்டவர். இவர்கள் யாவரும் சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கு பிரமாண்டமான பங்களிப்புக்களை செய்துள்ளனர். மார்க்சும் ஏங்கல்சும் இவ்வியக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்கள். மார்க்சும் ஏங்கல்சும் சகல சமூகத்தினதும் இயற்கையினதும் குறிப்பிடத்தக்க அம்சங்களை அவற்றின் அடிப்படைப் போக்கினை வெளிக்கொணர்ந்தவர்கள். உண்மைகளை ஆராய்ந்தும் இவ்வுண்மைகளின் தன்மைகளை அவதானித்தும் இதனை அவர்கள் செய்தனர். மார்க்சும் ஏங்கல்சும் இறந்தபின் ஏற்பட்ட உண்மைகளை லெனின் அவதானித்தார். பொதுவானதும் குறிப்பானதுமான விதிகளை போதித்தார். ஸ்டாலின் புதிய சகாப்தத்தில் வாழ்ந்தவர். மேலும் பல உண்மைகளை அவர் ஆராய்ந்தார் மாஓ சேதுங் கீழைத்தேசத்தில் இருந்துவந்தார். இதன் முக்கியத்துவத்தைக் குறிப்பாக லெனின் ஏற்றுக் கொண்டார். லெனின் அவர்கள் அசாத்தியமான தூரதிருஷ்டியுடன் சோஷலிச புரட்சிபற்றிப் பொதுவாக பேசும்போது, 'இறுதியாகப் பார்க்கையில், போராட்டத்தின் வெற்றி உலக சனத் தொகையின் பெரும் பான்மையானவர்களை கொண்ட ருஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் மக்கள் பங்குபெறுவதைபொறுத்திருக்கிறது. இந்தபெரும்பான்மையான மக்கள் கடந்த சில ஆண்டுகளாக தமது விமோசனப் போராட்டத்தில் மிகவும் துரிதமாகக் கலந்து கொள்ளத் தொடங்கிவிட்டனர். உலகபோராட்டத்தின் வெற்றி இனி உறுதியாகிவிட்டது' என்று குறிப்பிட்டுளார். மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் கீழைத்தேச உண்மைகளை கையாளவில்லை. கையாள அவர்களால் முடியவும் இல்லை. ஆனால் பொதுப்படையாகவே அவர்கள் இப்பிரச்சினைகளை அணுகினர்.

மார்க்ஸ், ஏங்கல்ஸ் லெனின் ஆகியோர் உருவாக்கிய கம்யூனிச சித்தாந்தம் உலகம் முழுவதற்கும் பொதுவானது என்பதில் சந்தேகமில்லை. மார்க்ஸ் வெளிப்படுத்திய முதலாளித்துவத்தின் சமூக விதிகள் சகல முதலாளித்துவங்களுக்கும் பொதுவானவை. முதலாளித்துவத்தின் வளர்ச்சி இடத்துக்கிடம் வேறுபட்டது ஆகையினால் மார்க்ஸ் ஆராய்ந்த 'எடுத்துக் காட்டான' அல்லது தத்துவ ரீதியான முதலாளித்துவம் நடைமுறையில் இல்லை. மறைந்திருக்கின்ற அடிப்படையான முக்கிய விதிகளை அறிந்து வெளிப்படுத்த மார்க்ஸ் இந்த வகையில் செயல்பட நேர்ந்தது. அவரது வெளிப்படுத்தல்கள் சரியானவை என்பது நிரூபிக்கப் பட்டுளது. மார்க்ஸ், ஏங்கல்ஸ் லெனின், ஸ்டாலின், ஆகியோரது நிலைப்பாட்டிலிருந்து சற்றும் விலகாது. அவர்களது அடிப்படை உண்மைகளை உறுதிப்படுத்திய அவர்களது படைப்புகள் முதலில் ஐரோப்பாவில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் பின்பு அமெரிக்காவிலும் இருட்டடிப்பு செய்யப் பட்டுள்ளன. அக்டோபர் புரட்சிக்குமுன் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் சோஷலிசப் புரட்சி எப்படி அமையும் என்பதை பொதுவாக அவர்களால் கூற முடிந்தது. ஆனால் லெனின் அவர்கள் விஞ்ஞான ரீதியான தீர்க்கதரிசன பார்வையுடன் முதலாளித்துவம் அதன் பலம் குறைந்த இடத்தில்தான் உடையப்போகிறது, அதாவது ருஷ்யாவில்தான் உடையப் போகிறது என்று குறிப்பிட்டார். மாறாக மார்க்சும், ஏங்கல்சும் முன்னேறிய முதலாளித்துவநாடுகளில்தான் முதலில் சோஷலிசம் தோன்றும் என்று கருதினர். அக்டோபர் புரட்சிக்குப்பின் லெனின் அப் புரட்சியின் அனுபவத்தைக் கொண்டு மாக்சிசத்தை மேலும் ஆழமாக அபிவிருத்தி செய்தார்.

## பொது விதியை குறிப்பானதுடன் இணைத்தல்

1921ம் ஆண்டு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்ப கர்த்தாக்களில் தலைவர் மாஓ அவர்களும் ஒருவராவர். சீனாவின் சோஷலிச புரட்சிக்கு எந்தவித வழிகாட்டிகளும் இருக்கவில்லை. மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர்களின் படைப்புக்களில் குறிப்பான வழிகாட்டல்கள் ஏதும் காணப்படவில்லை; சீனாவில் மாக்சிச அறிவு சொற்பமானதாகவே இருந்தது. கம்யூனிச சர்வதேச நிறுவனம் அப்போதுதான் தோன்றியது. லெனினுடைய தலைமையில் அது காலனித்துவ — அரைகாலனித்துவ நாடுகள்பற்றி அக்கறைகொண்டுள்ளபோதிலும் அடிப்படையில் அது ஓர் ஐரோப்பிய ஸ்தாபனமாகவே இருந்தது. 1917ம் ஆண்டு ஏற்பட்ட அக்டோபர் புரட்சி உலகமக்களை தட்டி எழுப்பி விட்டிருந்தது உண்மையே. இயல்பாகவே அப்புரட்சியின் பாதையும், அதன் முன் 1871ல் ஏற்பட்ட பாரீஸ் கம்யூன் பாதையும், புரட்சி எந்த வகையில் அமைய வேண்டும் என்ற சிந்தனையை கம்யூனிஸ்டுகளின் மனதில் தூண்டிவிட்டன. 1917 ஆம் ஆண்டில் ருஷ்யாவில் நடந்ததுபோல துரிதமாகத் தொழிலாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றும் முறை பற்றியே பலரும் சிந்தித்தனர். சிலர் இப்பாதை சகலருக்கும் பொதுவாக அமைய வேண்டியது என்றும் இது மாறுபடாத தத்துவம் என்றும் கருதினர், லெனின் இப்போக்கைக் கண்டு எச்சரிக்கை செய்தார்.

## ஐரோப்பியப் பாதையும சீனப் பாதையும்

தலைவர் மாசேதுங்கினது படைப்புக்களின் பின்னணி சீனக்கம்யூனிஸ்ட் கட்சிக்கு முன் செப்பனிடப்படாத புதியபாதை ஒன்று உள்ளது என்ற அடிப்படையைக் கொண்ட ஒன்றாகும். சீனகம்யூனிஸகட்சி தனது புரட்சிப்பாதையை தானே வகுத்துக்கொள்ளவேண்டும். தவிர்க்க முடியாமலும உண்மையாகவும சீனக்கம்யூனிஸ்டுகள் சீனாவின் மார்க்சிச — லெனினிசத்தை வகுக்க வேண்டியவர்களாகினர். இதனை அவர்கள் அபாரிதமான வெற்றியுடன் சாதித்தனர். ஐரோப்பிய பாதையைப்பின்பற்றும் முயற்சி அல்லது ஐரோப்பாவுக்கு வகுக்கப்பட்ட பாதை சீனாவைப் பொறுத்தவரை பொதுப்படையான சில வழிகாட்டல்களையே தந்துதவின. குறிப்பான பிரச்சனைகட்கு வழிகாட்டவில்லை. ஆனால்பொதுவான சமூகவிதிகள் எல்லோரையும்போல் சீனாவுக்கும் பொதுவானதாய் இருந்தன. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் முழுஉலகிற்கும் பொதுவான இயங்கியல், பொருள்முதல்வாதம் சீனாவுக்கும் பொருத்தமானது. இப் பொதுவிதிகளைக் குறிப்பாக எப்படிக் கையாள்வது என்பதுபற்றி சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு முன் அனுபவம் ஏதும் இருக்கவில்லை.

சீனப்புரட்சியின் குறிப்பிட்ட விதிகளை மாக்சிசத்தின் பொதுவிதிகட்கமைய வெளிப்படுத்திய பெருமை மாசேதுங் அவர்களையே சாரும். அதன் போக்கில் பொது விதிகளையும் அவர் வளர்த்தெடுத்து உள்ளார். மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஸ்டாலின் ஆகியோர் தனியாக நின்று சாதிக்கவில்லை என்பதுபோலவே மாஓசேதுங் அவர்களும் இச்சாதனைகளைத் தனியாக நின்றுசெய்யவில்லை. ஒவ்வொருவரும் தமது நெருங்கிய தோழர்களுடன் சேர்ந்து செயல்பட்டனர். இவர்கள் எவரும், மாஓசேதுங் உட்பட தவறு ஒன்றுமே இல்லாது செயல்படவில்லை. தாம் தவறுகள் செய்தோம் என்பதை அவர்களே ஒப்புக்கொண்டனர். இருந்தும் இறுதியான முடிபுகளை திறமையாக அமைத்தும் கொண்டவர்களும் அவர்களே. மாஓ அவர்களும் அப்படியே.

## மாக்ஸ் முதல் மாஓ வரை

மார்க்ஸ் தனது சிந்தனைகளை உருவாக்க ஜெர்மனிய பழமைவாய்ந்த தத்துவத்தையும், ஆங்கிலேய பொருளாதாரத்தையும், பிரெஞ்சு சோஷலிசத்தையும் அடிப்படையாகக்கொண்டு ஆராய்ந்தார். லெனினும், ஸ்டாலினும் மார்க்சையும், ஏங்கல்சையும் வழிகாட்டியாகக் கொண்டு தமது அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டனர். சீனக் கம்யூ

(5-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்.........

# திரிபுவாதத்தை எதிர்த்த போராட்டத்தில் மாக்சிச லெனினிசத்தை பாதுகாத்தார்

னிஸ்டுகள் மாக்சிச — லெனினிசத்திற்கு புதிதான ஓர் சூழ்நிலையில் மார்க்சிச — லெனினிசத்தை அணுகிச் செயல்பட்டனர். பிரச்சனைகளின் பூதாகாரம், பெரும் பிளவுபட்ட விவசாய வர்க்கம் அரை — காலனித்துவ நாடு ஆகிய நிலையை உற்று நோக்குகையில் மாஓசேதுங் போன்ற மாமேதை தவிர்ந்த ஏனையோர் செய்வதறியாது திகைத்துநின்றிருப்பர். ஆனால் சீனமக்களுக்கு சேவைசெய்ய வேண்டும் என்ற அவரது உணர்வு, பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற உறுதியை அவருக்குக் கொடுத்தது. பல நெருக்கடிகளுக்கு அவரால் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. சிலவேளைகளில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே பல இடையூறுகளை அவர் காண நேர்ந்தது. குறிப்பாக சீனப் பாதையில் ஒரு புதிய பாதையை வகுக்கவேண்டிய உறுதியுடன் தலைவர் மாஓ அவர்கள் மகோன்னதமான பங்களிப்பைச் செய்துளார். அவர் தனது மனதை விடுவித்தார். அந்த முயற்சியில் மற்றவர்களும் தமது மனங்களை விடுவிக்கவும் அவர்வழிகாட்டினார். ஒவ்வொரு நாடும் தனக்கென குறிப்பான ஓர் பாதையை வகுக்க வேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாடு அவரது படைப்புகளில் உலகக் கம்யூனிஸ்ட்டுகட்கு எடுத்துக்காட்டியுளது. அம் மக்களுக்காக வேறு எவரும் வந்துசெய்து கொடுக்க முடியாது. சீனக்கம்யூனிஸ்டுகள் கம்யூனிச ஆரம்ப கர்த்தாக்களினால் ஆரம்ப காலத்தில் வகுக்கப்பட்ட பொதுக்கோட்பாடுகளை மட்டும் நடைமுறைச்செயற்பட்டிருந்தால் சீனப் புரட்சியும், உலக புரட்சியும் பெருமளவு பின்தங்கியிருக்கும். இச்சிந்தனையை செயல்படுத்திக்காட்டியது - பிரதானமாக மாஓசேதுங் அவர்களே என்பதில் சந்தேகமில்லை. குறிப்பான சீனப் பாதையைவகுக்க வேண்டும் என்று அவர் துணிந்து நின்றார். இது மார்க்சிசத்தின் உண்மையான செயற்பாடாகும். அன்று உலகில் கம்யூனிசம் இருந்த நிலையில், குறைந்த அனுபவமும் சிந்தனையும், நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ சமுத்திரத்தின் மத்தியில் தத்தளித்த வேளையில் அவரது பங்களிப்பு மார்க்சிச — லெனினிச தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் செய்த மாபெரும் சாதனையாகும். மாசேதுங் அவர்களது ஆரம்பகால எழுத்துக்களில் இச்சிந்தனை தோன்றி வளர்வதை நாம் கண்டோம் இது சகல கம்யூனிஸ்டுகளும் ஏற்று கௌரவிக்கவேண்டிய சர்வவியாபகமான ஓர் உண்மையாகும்.

## இயங்கியல் தத்துவத்தை எளிமையாக்கினர்

தனது எழுத்துக்களில் தலைவர் மாஓ அவர்கள் மார்க்சிசத்தின் அடிப்படையான உலக நோக்கை வெகுதிறமையாக வெளிப்படுத்தியுள்ளார். இயங்கியல் பொருள்முதல் வாதத்தைப் பிரசாரம் செய்வதிலும் கடைப்பிடித்திலும் அவருக்கு அவரே நிகர் எனலாம். அவர் மிக உயர்ந்த நிலையில் எழுந்து நின்றார். அவரது இயங்கியல் பொருள்முதல்வாத வெளியீடுகளில் சிறந்தவை. அவரது 'நடைமுறை பற்றி' 'முரண்பாடு பற்றி' ஆகியவை. இவை இயங்கியல் பொருள் முதல்வாதத்தை இலகுவாக எடுத்துக்கூறிய யதார்த்தத்திலிருந்துஉண்மையை அறியும் மார்க்கத்தை வளர்த்தன. யதார்த்தத்தின் முரண்பாடுகளை அறிந்து அவற்றைத் தீர்க்கும் முறைகளை எடுத்துக்காட்டின. இவை உண்மையில் செயலுக்கு வழிகாட்டுவன. இவை புரட்சியின் அனுபவத்தில் உருவான அடிப்படைத் தத்துவங்கள் இவை உலக மக்களுக்குச் சேவைசெய்கின்றது. இவை மார்க்சிச உலகநோக்கை வளம்படுத்துகின்றன.

## வெகுஜன மார்க்கம் வீறு பெற்றது

வெகுஜனப் பாதை பற்றிய தலைவர் மாஓ அவர்களின் நம்பிக்கை மக்களிடமிருந்து — மக்களுக்கு என்ற கோட்பாடு தொடர்ச்சியாக மக்களே வரலாற்றின்சிருஷ்டி கர்த்தாக்கள் என்ற கோட்பாட்டில் அமைந்ததாகும். உண்மை நடைமுறையில் அவரது வழிகாட்டலில் அவரது தோழர்களின் வழிகாட்டலின்கீழ் சீனமக்கள் இந்த உண்மையை நிரூபித்துக்காட்டினர். இந்த வெகுஜன மார்க்கம் இல்லாவிடின் கம்யூனிஸ்ட்கட்சிகள் வழிதவறி சென்றுவிடும். கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மக்களிக்கும் இடையிலான இணைபிரியாதொடர்பை எடுத்துக் காட்டியதன் மூலம் தலைவர் மாஓ சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கு பெரும் பங்களிப்பைச் செய்தார். இதுவும் மார்க்சிச லெனினிசத்திற்கு அவர் அளித்த மாபெரும் பொக்கிஷமாகும்.

## பலாத்காரத்தின் சாராம்சம்

புரட்சிப்பாதை நீண்ட கடினமான பாதை என்ற உண்மையை ஆராய்ந்து ஏற்றமை அவரது மற்றொரு பங்களிப்பாகும். தலைவர் மாஓ பாட்டாளிவர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் விவசாய வர்க்கத்தின் பிரதான பாத்திரத்தையும் அங்கீகரித்து கடைப்பிடித்தார். புரட்சியிலும் எதிர்ப்புரட்சியிலும் பலாத்காரத்தின் பாத்திரத்தை அவர் உணர்ந்தார், செயல்படுத்தினார். அவர் விருத்தி செய்த புரட்சிகர இராணுவதத்துவம், புரட்சிகர இயக்கங்கள் முழுவதற்கும் ஓர் பெரும் பொக்கிஷம். ஏங்கல்ஸ் யுத்தம்பற்றி தெளிவாக எழுதியபோதும் அத்தத்துவத்தை பெரிதும் வளர்த்தபோதும் அவர் வாழ்ந்தகாலம் மாஓசேதுங் வாழ்ந்த காலத்தைவிட வேறுபட்டதாகும். நகரங்களை கிராமங்களிலிருந்து முற்றுகையிடுவது, நகரங்களில் படிப்படியாக சக்தியை வளர்ப்பது, எதிரியின் ஸ்தாபனங்களில் வேலைசெய்வது ஆகிய சீனாவின் விருத்தியடைந்த செயல்முறைகள் மாஓசேதுங் அவர்களின் வழிகாட்டலினால் ஏற்பட்டனவாகும். மாஓசேதுங் அவர்கட்கு புரட்சியின் வெற்றியிலும் மக்கள் மீதும் இருந்த நம்பிக்கையை அறிந்துகொள்ள அவரது எழுத்துக்களைப் படிக்கவேண்டும். இதுவும் மார்க்சிசம் லெனினிசத்திற்குக் கிடைத்த மகத்தான பொக்கிஷமாகும்.

## கட்சி அமைப்பை விருத்தி செய்தார்

தலைவர் மாஓ கம்யூனிஸ்ட் கட்சிபற்றிய மார்க்சிய தத்துவத்தை பெரிதும் விருத்தி செய்தார். கம்யூனிஸ்ட் கட்சியை எப்படி உருவாக்குவது, எப்படி அதனை சரியாக அமைப்பது, எப்படி முதலில் தத்துவரீதியாக வளர்ப்பது பின் அரசியலுடனும் ஸ்தாபனத்துடனும் ஒருமைப்படுத்துவது ஆகியன யாவும் முக்கிய பிரச்சனைகளாகும். கட்சியின் வேலைமுறையை சீர்திருத்து' 'எமது கல்விமுறையைத் திருத்துவது' 'ஒரே வகையான கட்சி எழுத்து நடையை எதிர்ப்பது, 'எமது கல்வியும் இன்றைய நிலைமையும்' ஆகிய கட்டுரைகளை எடுத்துக்கொண்டால் அவை சீனாவின் நிலையைக் கையாண்டன என்றாலும் உலகனைத்தினதும் கம்யூனிஸ்ட்கட்சிபற்றிய மாக்சிச — லெனினிசக் கோட்பாட்டிற்குக் கிடைத்த மகத்தான பங்களிப்பாகும். இவற்றைத் தொடர்ந்தும் படிப்பதால் திரும்பத்திரும்ப படிப்பதால் நாம் பெரும பயன் அடைய முடியும்.

## அணுகுமுறையில் சரியான நோக்கு

தலைவர் மாஓ தனது சகல எழுத்துகளிலும் மாக்சிச—லெனினிச சிந்தனையின் சுதந்திரத்திற்கு சிறந்த உதாரணமாக விளங்கினார் யதார்த்தத்தில் இருந்து உண்மையை அணுகு! சிந்தனை என்னும் கருவியை கையாள் என்று அவர் போதித்தார். பாரம்பரிய வரட்டு 'வேதாந்தம்' 'கடந்தகாலப் பேய்கள்' 'இந்த அதிகாரம் அந்த அதிகாரம்' என்பவற்றை காட்டி அவரைமயக்க முடியவில்லை. கம்யூனிச இயக்கத்தில்தோன்றிய வரட்டுத் தத்துவங்களை மார்க்சும் ஏங்கல்சும் லெனினும் கண்டித்துள்ளனர். தலைவர் மாஓவும் வரட்டுத் தத்துவங்களில் கட்டுண்டு கிடக்கவில்லை; அவர் நூல்களை கண்மூடித்தனமாகப் பின்பற்றவில்லை. மாறாக அவற்றை கற்றுணர்ந்தார். மற்றவர்களையும் படிக்கும்படி தூண்டினார். ஆனால் புத்தகங்களை வணங்குவதை அவர் எதிர்த்தார். எதுவும் ஆராயப்படவேண்டியவை. மார்க்சிச — லெனினிசத்தை ஆயுதமாகக் கொண்டால் ஆராய்வு சரியான பாதையைக் காட்டும். தெரிவுசெய்யப்பட்டபாதை பரீட்சிக்கப்படல்வேண்டும் தவறானால் திருத்தப்படவேண்டும். சரியானவை வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். இதே கண்ணோட்டத்தில் தலைவர் மாஓவின் நூல்களையும் நாம் அணுகவேண்டும். தனது வார்த்தைகளை வணங்கி நிற்பவர்களை முதலில் கண்டிப்பவர் அவராகவே இருப்பார். அவரது எழுத்துக்கள் ஆழமாகக் கற்கப்பட வேண்டியவை. அவற்றிலிருந்து கற்றுக் கொள்ளவேண்டும். அவை வரட்டுத் தத்துவங்களல்ல. மார்க்சிசத்தை பொதுவாக அணுகுவதுபோல் அவரது கோட்பாடுகளையும் பிரச்சினைகளை அணுகும்போது நாம் அணுகு முறையைப் பயன்படுத்தவேண்டும். அவுஸ்திரேலியாவில் கம்யூனிஸ்டுகள் மாஓசேதுங்கைப் போன்று சிந்திக்கத்துணியவேண்டும், சரியான பாதையை தெரியத் துணியவேண்டும். வரட்டுத் தத்துவத்தில் மூழ்காமலிருக்க வேண்டும். இத்தத்துவங்களை கௌரவித்து அவற்றில் நல்லவற்றைக் கொள்வதன் மூலம் அவுஸ்ரேலிய பிரச்சினைகளை தீர்க்க உதவும். கம்யூனிச இயக்கம் முழுவதற்கும் இது பொருத்தமாகும்.

தலைவர் மாஓசேதுங் ஐக்கிய முன்னணிபற்றிய கோட்பாட்டை வெகு திறமையாக வகுத்து நடைமுறைப்படுத்தினர். ஐக்கிய முன்னணி ஆயுதப்போராட்டம் கம்யூனிஸ்ட் கட்சியை சரியாகக் கட்டி வளர்த்தல் ஆகியன சீனாவின் விடுதலைப்போராட்டம் வெற்றிபெற உதவிய சக்திமிக்க மூன்று ஆயுதங்கள் இப்போராட்டத்தில் அரசுபற்றிய மாக்சிய-லெனினிச தத்துவம் பெரிதும் விருத்தி அடைந்தது.

## திரிபுவாதத்தை எதிர்த்தார்

மார்க்சிசத்தின் புரட்சித் தன்மையை மழுங்கடிக்கும் முயற்சிகளுக்கு எதிராக தலைவர் மாஓ உறுதியுடன் போராடினார். லெனின் வேறு ஒரு காலத்தில் திரிபுவாதத்தை எதிர்த்து போராடினார், அவர் எப்போதும் மார்க்சிச லெனினிசத்தின் புரட்சிகர அடிப்படையை உயர்த்திப் பிடித்தார். மாசேதுங் துரோகி குருஷேவின் திரிபுவாதத்திற்கெதிராக அப்புரட்சிகரஅடிப்படையை தூக்கிப்பிடித்தார். அவர் சோவியத் யூனியனின் சோஷலிசத்தை நுணுக்கமாக ஆராய்ந்தார். ஆரம்பத்திலேயே சில சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்களிடம் திரிபுவாதம் தோன்றியதை அவர் கண்டார். அவர்கள் முதலாளித்துவ — ஏகாதிபத்தியபாதையில் செல்வார்கள் என்பதை உணர்ந்தார். கட்சி எச்சரிக்கையாக இருக்காவிடில், கட்சி தொடர்ந்து தத்துவப்போராட்டம் நடத்தாவிடில், கட்சி வெகுஜன மார்க்கத்தைக் கடைப்பிடியாவிடில், சோஷலிசத்தில் முதலாளித்துவம் தலைதூக்கும் என அவர் சரியாகவே எடுத்துரைத்தார். லெனினினும் இந்த அபாயத்தை எடுத்துரைத்தார். தலைவர் மாஓவின் வழிகாட்டலில் சீனக் கம்யூனிஸ்டுகள் மாக்சிச-லெனினிசத்தின்புரட்சிகர அடிப்படையை பேணிக் காத்து வளர்த்தனர் இன்று அவர்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, கம்யூனிஸ் கட்சியின் தலைமையை மார்க்சிசம்-லெனினிசம் மாசேதுங் சிந்தனையை — சோஷலிசப் பாதையை நிலைநாட்ட விரும்புவது அதன் தொடர்ச்சியே யாகும்.

## சமூக ஏகாதிபத்தியத்தை இனம் கண்டார்

சீன கம்யூனிஸ்ட் கட்சியில் சில நபர்கள் திரிபுவாதத்தை தவறாக அர்த்தம் கொண்டு கோட்பாடற்ற முறையில் உண்மை மார்க்சியவாதிகட்கெதிராக பயன்படுத்தினர் என்பது வேறு விடயம். உலகில் சிலர் திரிபுவாதிகளாக இருந்து கொண்டும் அல்லது திரிபுவாத போக்குகளைக் கொண்டபோதிலும் சோவியத் யூனியனின் உலக ஆதிக்கத்தையும் யுத்தத்தையும் எதிர்க்கின்றனர் என்பதும் வேறு விடயம். இவர்களை சோவியத் ஏகாதிபத்தியத்திற்கெதிரான உலகளாவிய ஐக்கிய முன்னணிக்குள் சேர்ப்பது சரியானதே. சோவியத் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டத்தில் அதற்கெதிராக ஐக்கியப்படுத்தக்கூடிய சகலரும் ஐக்கியப்படுத்தப்பட வேண்டும். வேற்றுமைகள் பின் தள்ளப்படலாம். எமது அவுஸ்ரேலியகட்சி திரிபுவாதத்தின் அபாயத்தை மறக்கக்கூடாது. அதனை இனம் கண்டுகொள்ள எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும். எல்லாத் தவறுகளும் திரிபுவாதம் ஆகாது. மாஓசேதுங் எப்போதும் உலக நிலைபற்றி சரியான கணிப்பீட்டைச் செய்தார். யப்பானிய ஏகாதிபத்திய யுத்தத்திலும் விடுதலைப் போரிலும் ஏகாதிபத்திய வல்லரசுகளுடையிலான முரண்பாடுகளை அவர் சரியாக ஆராய்ந்து குறிப்பிட்ட நேரத்தில் பிரதான எதிரியையே தாக்குவதில் கவனம் செலுத்தினர். முரண்பாடுகளை போராட்டத்திற்குசாதகமாகப் பயன்படுத்தினர். அவர் குருஷேவின் திரிபுவாதத்தை ஆரம்பத்தில் அறிந்து கொண்டதுபோல் சோவியத் யூனியன் ஓர் ஏகாதிபத்திய வல்லரசாக வளர்வதையும் முன்கூட்டியே அறிந்து கொண்டார். 1974ல் மூன்று உலகங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை எடுத்தியம்பி உலக சக்திகளை சரியாக இனம் கண்டுகொண்டார். அவரது கொள்கை இன்றும் சரியானதாய் நடைமுறைக்கு வழிகாட்டுவதாய் உளது. அது உலக மக்களுக்கு சேவை செய்கிறது. தனது வாழ்நாள் முழுவதிலும் சர்வதேச பிரச்சினைகளில் அவரது தூரதிஷ்டி தெளிவாக இருந்தது ஏன்? அவர் சர்வதேச நிலையில் யதார்த்தத்திலிருந்து உண்மையை அறிந்தார். உலக மக்களின் நன்மை கருதிச் சிந்தித்தார்.

'தோழர் மாசேதுங்கின் சரித்திர பங்கும் மாசேதுங் சிந்தனையும்' என்ற சீனக் கட்சியின்தீர்மானம் தலைவர் மாஓ அவர்கள் மாக்சிசத்திற்கு ஆற்றிய சேவையை எடுத்தியம்புகிறது. 'மாக்சிச-லெனினிச தத்துவத்திற்குப் புதிதான பலவற்றை மாஓசேதுங் சிந்தனை பொக்கிஷமாக சேர்த்துக் கொண்டது' என குறிப்பிடப்பட்டுளது. இது சரியானதாகும்.

மாஓசேதுங்கை ஓர் கடவுளாக கருதுவதோ அல்லது அவர் சொன்ன ஒவ்வொரு வாக்கும் சர்வவியாபகமான உண்மை என்றோ கருதுவது பூரணமாக சரியானதல்ல. உண்மையில் மாக்சிசத்தில் சிலதுறைகளில் அவர் கைபோடவேண்டியதாய் இருக்கவில்லை. அரசியல் பொருளாதாரத்தை உதாரணமாகக் கொள்ளலாம். ஆனால் அவரையோ அல்லது மார்க்ஸ், ஏங்கல்ஸ் லெனின் அல்லது ஸ்டாலினையோ கடவுளாகக்

(7-ம் பக்கம் பார்க்க)

# தலைவர்கள் எல்லாம் பெற்றனர்! தொழிலாளர் எல்லாம் இழந்தனர்!

## மலையகச் செய்திகள்

மலையகப் பாட்டாளி வர்க்கத்தின் கண்ணீர்கலந்த வரலாறு ஒன்றரை நூற்றுண்டு கால வரலாறாகும். அன்று வெள்ளைக்கார சுரண்டல் பேய்களுக்கு இரை கொடுப்பதற்காகப் பெரிய கங்காணிகளினால் ஏமாற்றி அழைத்து வரப்பட்ட மலையகப் பாட்டாளி வர்க்கம் இன்றும் கறுத்த சுரண்டல் பேய்களின் காலடிகளில் நசுங்குண்டு கிடக்கிறது. இலங்கையின் இன்றைய சுரண்டல் பிசாசுகளுக்கு அன்றைய பெரிய கங்காணிகளின் வாரிசுகள் மலையகப் பாட்டாளிகளைச் சுரண்டி அடக்கியொடுக்குவதற்கு புதிய கங்காணிகளாக செயல்படுகின்றனர்.

இன்றைய நிலையில் மலையக பாட்டாளிவர்க்கம் தனது சிந்தனையை விரிவுபடுத்தித் தனது செயல்முறையை புதியதோர் பாதையில் முன்னெடுக்கவேண்டும். அதற்கு கடந்த காலத்தின் ஒவ்வொரு சம்பவத்தையும் எடைபோட்டுக்கொள்வதும் அவசியமாகும்.

மலையக மக்களின் முடிசூடா மன்னன் எனப்படும் தொண்டமான் அவர்களின் தொழிற்சங்க வரலாறு நாற்பது ஆண்டுகளைக் கடந்துவிட்டது. இ. தொ. கா.வும் அதன் தலைவர் தொண்டமானும், தோட்ட தொழிலாளர்களுக்குப்பெற்றுக் கொடுத்தவற்றையும் — அதேவேளை தோட்டத் தொழிலாளர்களை காட்டி தொண்டமானும் அவரைச் சூழ்ந்தோரும் பெற்றுக் கொண்டதையும் எடைபோட்டுப் பார்க்க வேண்டும். தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டனர். ஏமாற்றிய தலைவர்கள் பெரும் சொத்துகளுக்கும் பெரும் பதவிகளுக்கும் ஆளாகிக் கொண்டனர். தோட்டத் தொழிலாளர்கள் வர்க்கரீதியில் அடக்கப்பட்டனர். அதே வேளை தொண்டமானும் ஏனையோரும் வர்க்கரீதியில் வளர்ச்சி பெற்று இலங்கையின் சொத்துடைய வர்க்கத்துடன் ஒன்ருகினர். தோட்டப்புற பாடடாளிகள் மத்தியில் நான் ஒரு இந்திய வம்சாவழி, நீங்கள் இந்திய வம்சா வழியினர், எங்களுக்குள் பேதமில்லை. எங்கள் எல்லோருக்கும் ஒரேவிதமாக உரிமை தேவை. எனவே என்னையும் எனது இ.தொ.க. வையும ஆதரியுங்கள் என்று உரத்து சத்தமிட்டவர்களின் இன்றைய சொல்லையும், செயலையும் வாழ்வையும் மலையகப் பாட்டாளிவர்க்கம் புரிந்து கொள்ளத்தான செய்கிறது. இனம்பேசி, பிரதேசபேசி பண்பாடு பேசிய தொண்டமான் போன்ற தலைவர்களின் வாழ்வு எங்கே? அதை நம்பிய மலையகப் பாட்டாளிகளின் வாழ்வு என்னவாயிற்று? இரு மாதசம்பளத்தையோ அன்றி ஆண்பெண் சமசம்பளத்தையோ பற்றித் தனது வர்க்கசகாவான ஜே. ஆரின் முன் வாய் திறக்க முடியாதநிலையில் தொண்டமான் இருக்கிருர் என்ருல் அதன் உள்ளடக்கம்தான் என்ன? வர்க்க ஐக்கியம் மட்டுமே அன்றி வேறு எதுவும் இல்லை. தமது வர்க்க சுகபோகத்திற்கு வர்க்க வளர்சிக்கு ஆளும் வர்க்க அதிகார வெறிக்கு இனம் — மொழி— பிரதேசம் என்பவை வெறும் முகமூடிகளேயாகும். இந்த முகமூடிகளைத் தொண்டமானும் இ. தொ.கா.வும் அதன் தலைவர்களும் மிகவும் கெட்டித்தனமாக பாவித்து எமது மலையகப்பாட்டாளி வர்க்கத்தை ஏமாற்றினர். அதனுல வெற்றிகளையும் இலாபங்களையும் அவர்கள் பெற்றுக் கொண்டனர்.

**ஆர். செல்வம்**

இன்று இந்த முகமூடிகள் கிழிந்துகொண்டிருக்கின்றன. மலையகப் பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் வீறு பெற்று எழுந்துசொண்டிருக்கும் புதிய இளம் தலைமுறையினர் எதையும் இலகுவில் இனம்காணும் நிலைக்கு வளர்ந்துவருகின்றனர். அவர்களை எந்த வகையாலும் எதிர்காலத்தில் ஏமாற்றமுடியாது'

தொண்டமானுடைய இடத்தை வெவ்வேறு வழிகளில் அடைந்துவிட வேறு சில கனவான்கள் இன்று புதிய முகமூடிகளை அணிய எத்தனிக்கின்றனர். 'மலையக மக்கள்' 'இந்தியவம்சாவழியினர்' 'தனிதேசிய இனம்' 'பிரதேச தனித்துவம்' என்ற பல கோஷங்களை கிளப்பி வர்க்க அரசியலிலிருந்து மலையகப்பாட்டாளி வர்க்கத்தை திசைதிருப்பி தேசிய ஓட்டத்திலிருந்து பிரித்து இன பிரதேச அடிப்படையில் இழுத்து செல்லமுயல்கின்றனர், ஆனல் சரியானவர்க்க அரசியல் போதம்பெற்று வளர்ந்து வரும் மலையக இளம் சந்ததியினரை எத்தகைய கனவான்களாலும் ஏமாற்ற முடியாது. ஏனெனில் இந்த நபர்கள் சொல்வதில் இருந்தல்ல அவர்கள் செய்கின்ற செயல்களை நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றின் சரி பிழைகளைக் கண்டுகொள்ளும் ஆற்றல் படைத்த இலம் அரசியல் சக்தியாக எமது இளைஞர்கள் இன்று மலையகத்தில் திரண்டு வருகின்றனர். முகமூடிகளும் அவற்றைத்தாங்கிவரும் மனிதர்களும் புதியவர்களாக இருக்கலாம். ஆனல் செய்கைகளும் நடைமுறைகளும் பழைய பாதையைக் கொண்டதாகவே உள்ளன. இவர்களை இனம் காணுவது இலகுவானதேயாகும்.

தவறுனவற்றையும் ஏமாற்றுத்தனத்தையும் இனம் கண்டால்மாத்திரம் போதாது. இன்றைய நிலையில் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து நமது மலையக இளம் தலைமுறையினர் சரியான அரசியல் ஸ்தாபன ரீதியில் அணிதிரளவேண்டும்.

# அளகொள தோ. தொழிலாளரின் சேமலாப நிதிப்பணம் - எங்கே?

நோர்வூட்-அளகொள தோட்டத் தொழிலாளருக்கு கடந்த பதினைந்து வருட காலமாக 'தொழிலாளர்சேமலாபநிதி' (E. P. F.) தோட்டத்தில் பிடிக்கப்பட்டபோதும் இன்னும் இது சம்பந்தமான அத்தாட்சிப் பத்திரம் கிடைக்கவில்லையாம். எனவே இந்த் தோட்டத்தொழிலாளரின் சேமலாபநிதிக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியாதுளது.

இதுசம்பந்தமான புகாரை தொழிற்சங்கங்களிடம் வெளியிட்டபோதும் அவையும் 'ஏனோதானோ' நிலையில் இருப்பதால் இந்த பதினைந்து வருட கால சேமலாப நிதிக்கான அத்தாட்சிப் பத்திரம் கிடைக்காதுளது.

அளகொள தோட்டம் 1966ம் ஆண்டுமுதல 1978ம் ஆண்டுவரை திரு.முத்தையா பிள்ளை என்பவரால் நடத்தப்பட்டது. இவர் 1978ம் ஆண்டு திரு. இரட்ணகுமார் என்பவரிடம் கையளித்து விட்டதாகத் தெரியவருகின்றது. எனவே இந்த 1966ம் ஆண்டைத் தொடர்ந்து இன்றுவரை இத்தோட்டத் தொழிலாளரின் சேமலாப நிதி — அதன தலைமையகத்துக்கு செல்லுகிறதா? அல்லது யாருடைய ''பொக்கற்றுக்கு'' போகிறதா? என்று தொழிலாளர்கள் ஏங்குகின்றனர்.

இதனைத் தொடர்ந்து தேசபக்த வாலிப இயக்கம் மலையகபிரதேசக்கிளை சேமலாபநிதி தலைமையகத்துக்கு அறிவித்து இத்தோட்டத் தொழிலாளரின் சேமல ப நிதி ஆண்டுதோறும் சேர்கின்றதா? இல்லையா? என்ற விபரத்தை அறிந்து தொழிலமைச்சு உட்பட ஜனுதிபதி வரைக்கும் விடயத்தை வெளிக்கொணர்ந்தளது. இப்படி எத்தனை தோட்டங்களில் சேமலாபநிதித் 'திருகுதாளங்கள்' நடைபெறுகிறதோ! தெரியவில்லை.

# சீன் தோட்டத்தில் பாரதிவிழா

பூண்டுலோயா சீன் தோட்டம் அண்மையில் பாரதி நூற்றுண்டு விழாவினை மிகச்சிறப்பாக ஒழுங்குசெய்திருந்தது. இதனை இலங்கை தேசபக்த வாலிபஇயக்க சீன் கலை-இலக்கியக்குழு நடாத்தியது.

''சிறுபொறி காட்டுத் தீயை உண்டாக்கும்' இந்தக் கோட்பாட்டைக் கூறியவர் சமுதாய சிற்பியும், பெரும் ஆய்வாளனும் ஆசானுமாகிய மாஓ அவர்களே. ஆனல் பாரதி பின்வருமாறு பாடுகின்றுன்:-

'அக்கினிக் குஞ்சொன்று  
கண்டேன் —அதை  
ஆங்கொரு காட்டிலோர்  
பொந்திடை வைத்தேன்  
வெந்து தணிந்தது காடு-சழல்  
வீரத்தில் குஞ்சென றும்  
மூப்பென்றும் உண்டோ?''

பாரதிவிழா இன்றுஇலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் பரந்துபட்ட ரீதியில் நடைபெறுகின்றது. ஏன்? இலங்கையில்கூட இன்றுஏகப்பட்ட இயக்கங்களும், ஸ்தாபனங்களும் பாரதிக்கு விழா எடுக்க உத்தேசித்துள்ளன. மேற்கூறியவைகளைவிட வித்தியாசமானது சீன்தோட்டம் பாரதிவிழாவைக் கொண்டாடியது. யாருக்காக பாரதி பாடல்களை பாடினுனே அவர்களே அந்த பாரதி விழாவை நடாத்தினர். அவர்கள்தான் தோட்ட தொழிலாளர்கள். மலையக மக்கள் — காட்டுமிராண்டிகள்; பஸ்ஸிலே பிரயாணம்செய்யத்தெரியாதவர்கள்; நாகரிகமாக உடுக்கத் தெரியாதவர்கள் என்றெல்லாம் வருணிக்கப்படுகின்ற மக்கள் பாரதிக்கு விழா எடுத்திருக்கின்றனர். ஏனென்ருல் பாரதி அந்த சமுதாயத்தோடு இணைந்து நின்று பாடிய ஏழைக் கவிஞன் ஆவான்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம்  
—வீணில்  
உண்டு களித்திருப்போரை  
நிந்தனைசெய்வோம்''

என பாரதிபாடினுர், உழைக்கின்ற வர்க்கத்தின் உழைப்பை உறிஞ்சுகிற வர்க்கத்தினை நிந்தனை செய்வதற்கு பாரதி அன்றே அறைகூவல் விடுத்தார். ஆனுல் இன்று பாரதியை போற்றும் சிலர் பாரதி, 'முருகனைப் பாடினுன்; கண்ணனைப் பாடினுன்' என்கின்றனர். ஆனல் உண்மை பாரதியை புரட்சிப் பாரதியை அவர்கள் மறைக்கின்றனர். இந்த வகையில் மலையகம் புரட்சிக் கவிஞன் பாரதியின் பாடல்களை புது இராகம் கூட்டி கூவத்தொடங்கிவிட்டது.

அச்சம் தவிர்!  
ஆண்மை தவறேல்!

'அச்சமில்லை அச்சமில்லை  
அச்சமென்பதில்லையே,  
உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும்  
அச்சமில்லை அச்சமில்லை  
அச்சமென்பதில்லையே'

என்ற பாரதியின்பாடலை முரசறையும் மலையக தொழிலாளர்கள் கண்ணிரண்டையும் விற்று சித்திரம் வாங்கத் தயாராக இல்லை. அவர்கள் விடுதலையை நோக்கி வீரசுதந்திர கீதம் பாட தயாராகி விட்டார்கள்.

பஞ்சம்! பஞ்சமென்று கூருதே!

பஞ்சத்திற்கான காரணத்தை எண்ணிப்பார்! என்றே நாம் மலையக பாட்டாளி வர்க்கத்தைக் கேட்கின்ருேம்.

பணிய ஸ்கல்பா தோட்டத்தில்

# லூசுன் நூற்றுண்டு தினக்கூட்டம்

அண்மையில் தலவாக்கெலை பனியஸ்கல்பா தோட்டத்தில் சீன புரட்சிகர எழுத்தாளரான லூசுனின் நூற்றுண்டுவிழாவினை இலங்கை தேசபக்த வாலிப இயக்க மலையக பிரதேசக் கமிட்டி ஒழுங்கு செய்திருந்தது.

லூசுன் அவர்கள் பிரபுத்துவ அமைப்பில் நசுங்கிக்கொண்டிருந்த சீனமக்களை தமது எழுத்தாயுதத்திஞல் தட்டியெழுப்பினுர். இந்திய விடுதலை காலத்தில் விடுதலைக்கீதம் பாடிய 'கவிக்குயில்' பாரதியினைப் போலவே லூசுன் தனது இலக்கிய ஆக்கங்களை சரதாரண மக்களுக்கே படைத்தார். லூசுனின் ஆக்கங்கள் தேச விடுதலையை அடிநாதமாகக் கொண்டுள்ளன. இந்த ஆக்கங்கள் சீனவிடுதலைக்கு மாத்திரமன்றி சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் விடுதலைக்கே வழிகாட்ட வல்லன.

மலையகம் லூசுனின்விழாவினை நடாத்தியது இதுவே முதல்தடவை என்ருலும்பிற்போக்குவாதிகளினுல் இதுவரை தொழிற்சங்கவாதிகளின் தலைமையில் பயிற்றப்பட்ட மலையகம், லூசுனுக்க விழாவெடுத்திருக்கின்றது. லூசுன் எதிர்பார்த்த தேச விடுதலையை, புதிய சமுதாய அமைப்பை ஏற்படுத்தும் பாதையில் மலையக பாட்டாளி வர்க்கம் தனது பங்களிப்பை நிச்சயம் செய்யும் என்பதை இக்கூட்டம் உறுதிப்படுத்தியது.

தொழிற்சங்க மாநாட்டிற்கு

# சிவாஜி வருகிருராம்!

வருகின்ற மார்ச்மாதம் 28ம், 29ம், 30 ம் திகதிகளில் நடைபெறவிருக்கிற பிரபல தொழிற்சங்கம் ஒன்றிற்கு நடிகர் திலகம் சிவாஜிகணேசன் வருகைதரவிருப்பதாக பேசிக்கொள்ளப்படுகிறது.

வழக்கமாக சினிமா நடிகர்களை கொணர்ந்து மாநாடு நடாத்துகின்ற மேற்படி தொழிற்சங்கம், தனது செல்வாக்கை படிப்படியாக இழந்துவருகின்ற மலையகத்தில், மக்கள் திரண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில் சிவாஜியை இம்மாநாட்டுக்கு அழைத்திருப்பதில் விந்தையில்லைதான். எனினும் தாங்களும் நடிகர் திலகத்தைவிட மேலான நடிகர்கள் என்பதனை மலையக மக்களுக்கு உணரவைக்கிருர்களோஎன்ற ஒரு சந்தேகம் எழுகிறது.

சிவாஜி மாத சம்பளம் தருவாரா? நடிகர் ஜெமினி மழைக்கு குடை தந்தது போல! மலையகமக்களே! உங்களது ரூ. 2 சந்தா எந்த மகாநாட்டுக்கு! யாருடைய மேம்பாட்டிற்கு செயல்படுகிறது என்பதைதெரிந்துகொள்ளுங்கள்.

சிறுகதை

# பஞ்சகோணக் கோட்டை

பாரதியார்

ஒரு தேசத்தில் ஒரு கோட்டை இருந்தது. அதற்குப் பஞ்சகோணக் கோட்டை என்று பெயர். அதாவது அந்தக்கோட்டைக்கு ஐந்து மூலைகளும் ஐந்து பக்கங்களும் உண்டு. அந்தக் கோட்டையை வெகுகாலமாய் எந்தச் சத்துருவாலும் பிடிக்க முடியவில்லை. அதை அழிவற்ற கோட்டை என்று உலகத்தோர் புகழ்ந்து வந்தார்கள். முன்பக்கம் ஆழமான கரும்பாறை அஸ்திவாரமாக இருக்க, அதன்மேல் பெரிய பெரிய கற்களால் ஆகாயமளவாகக் கட்டப்பட்டிருந்தது. கற்கள் ஒன்றில் ஒன்றாக பதிக்கப்பட்டுப் பின்னல் வரிசைகளாயிருந்தன. ஒரு சுவரைப் பெயர்த்தால் தான் ஒருகல்லைப் பெயர்க்க முடியும். இவ்விதமாக நான்கு பக்கங்களும் மிகுந்த பலத்தோடும் கூடி அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் பின்பக்கமாகிய ஐந்தாம்பக்கம் மண் சுவர்தான இருந்தது.

இந்த இரகசியம் வெகுகாலமாக ஒருவருக்கும் தெரியாமலிருந்தது. அந்தக்கோட்டையைப் பிடிக்க வந்த வீரசேனர்கள் எல்லாம் பலமான பக்கங்களைத் தாக்கி அபஜயமடைந்து போனார்கள். அதனால் அந்தக் கோட்டையின் கீர்த்தி உலகமெங்கும் பரவிவிட்டது.

இவ்வாறிருக்கும் காலத்தில் அந்தக்கோட்டைக்குள் சிநேகமாய் புகுந்த ஒரு அந்நியன் வெகுகாலமாய் அங்கு இருந்ததால் அந்தக் கோட்டையின் பலஹீனமான பக்கம் இன்னதென்று அறிந்து கொண்டான். பலமான நாலு பக்கங்களும் பலஹீனமான மண் சுவராலாகிய ஐந்தாம் பக்கத்தை மிக இழிவாக மதித்து நடாத்திவந்தன. கல் சுவர்களுக்கும் மண்சுவருக்கும் பொருத்தமிருக்குமா?

அந்தக் கோட்டையைச் சுற்றி ஆழமான அகன்ற அகழ் ஒன்று இருந்தது. ஆனால் பின்பக்கம் இருந்தது மண்சுவராகையால் அதையடுத்திருந்த அகழியின் பாகம் ஆழமில்லாமல் மேடாயிருந்தது. அகழின் ஜலம் சிறிது வற்றும் காலத்தில் மண் சுவர்ப்பக்கம் தரைதெரியும் படி வற்றிப்போகும்.

இந்த மர்மங்களையெல்லாம் அறிந்த அந்நியன் ஒரு சிறிய படைதிரட்டிக்கொண்டுவந்து அகழ் ஜலம் வற்றியிருந்த மண் சுவர்ப்பக்கம் இறங்கி அந்த சுவரைத் தாக்கி அதைக் கைவசப்படுத்திக்கொண்டு கோட்டையைப் பிடித்துக்கொண்டான்.

கோட்டையிலிருந்த அளவற்ற நிகரற்ற செல்வங்களையெல்லாம் தன் தேசத்திற்கு வாரிக்கொண்டு போனான்.

வீராதிவீரர்களுக்கும் கைவசப்படாத இந்த கோட்டையைப் பிடித்த காரணத்தாலும் அதிலிருந்து வாரிக்கொண்டு போன செல்வத்தின் உடமையாலும் அந்த அந்நிய ஜாதியார் உலகத்தில் தலையெடுத்துக்கீர்த்தி பெற்று வாழ்ந்தார்கள். உண்மையை அறியாத உலகோர்கள் கோட்டை முற்றிலுமே பலமற்றதாக இருக்கவேண்டும் என்றும் அல்லது அதைக் கைவசப்படுத்திக் கொண்ட அந்நியர் மகா வீரர்களாக இருக்கவேண்டுமென்றும் பேச ஆரம்பித்தார்கள். கோட்டைக்குள் இருந்தவர்களில் பலரும் அவ்வாறே மதிமயங்கிப் பிதற்றி வந்தார்கள்.

தெய்வானுகூலத்தால், கோட்டைக்கு உரியவர்களில் அநேகருக்குச் சுய அறிவு வந்து, பலஹீனம் இந்த இடத்தில்தான் இருக்கிறதென்று தெரிந்துகொண்டார்கள். உடனே அவர்கள் மண் சுவரைக் கற்சுவராய் கட்ட ஆரம்பித்தார்கள். அப்படிச் செய்யவொட்டாமல் அவர்களைப் பலவித உபாயங்களாலும் அந்த அந்நியர்கள் தடுத்தார்கள். எனினும் அவர்கள் விடா முயற்சியோடும் ஒற்றுமையோடும் வேலை செய்து வந்ததால் காரிய சித்திபெற்றார்கள். ஐந்து பக்கங்களும பலப்பட்டு ஒரே கற்கோட்டையாய்ப் போகவே அது முன்னிலும் அதிகமாய் உறுதியடைந்து உலகம் முற்றிலும் அழிந்தால் அல்லாது அழியாத கோட்டையாகிவிட்டது.

நண்பர்களே, இந்தக் கதையின் உட்பொருள் இன்னதென்று உங்கட்கு தெரியுமா? பாரததேசத்தாராகிய நாம், அந்தப்பஞ்ச கோணக் கோட்டையாவோம் கற்சுவர்கள் நாலும் மேலான சாதிகள். மண்சுவரே பஞ்சமர் என்ற ஐந்தாம் சாதியாம். கோட்டையைச் சூழ்ந்திருக்கும் அகழ் சுதேசாபிமானம்.

பஞ்சமர்களை நாம் எவ்வளவு அநாதரவாகவும், கொடுமையாகவும நடத்திவருகின்றோம்? மேல்குலத்தோர் குடியிருக்கும் தெருக்களில் அவர்களை குடியிருக்க கூடாதென்று தடுக்கிறோம். அவர்களைத் தொட்டாலே பாபம் வந்துவிடும் என்று விலகியாடிப் போகும்படி ஏவுகிறோம். விராட புருஷனுடைய அங்கமாகிய ஒரு வகுப்பாரை ஈனஜாதியாரென்று நிராகரித்து தள்ளிவிடுதல் தர்மமாகுமா? ஒரே தேசத்தில் எத்தனையோ யுகங்களாய் வசித்துவரும் நமது சகோதரர்களாகிய பஞ்சமர்களை நாம் அவ்வாறு நடத்தி வந்தால் அவர்களுக்கு சுதேசாபிமானம் எவ்வாறு ஏற்படும்? அந்நியர்கள் அவர்களை நாம் நடாத்துவதைக்காட்டிலும் மேலாக நடத்தினால் அவர்கள் அந்த அந்நியர்களுக்கு வசப்பட்டுப் போகிறார்கள்.

கடவுள் எல்லோரையும் சமமாகவே சிருஷ்டித்தார். கடவுள் முன்னிலையில் ஜாதி வித்தியாசம் இருக்குமா? நல்வினைக்கு நற்பலனும் தீவினைக்குத் தீய பலனும் சித்தித்தல் அனுதியான பிரமாணம், பஞ்சமர்களை நாம் எவ்வாறு சகிக்க முடியாத கொடுமைக்கிடமாக நடத்தினோமோ அவ்வாறே நம்மையும் அந்நியர் நடத்திக்கொண்டு வருகின்றார்கள்.

இனியேனும், நாம் பஞ்சமரை ஆதரித்து அவர்களுக்குக் கல்விபுகட்டிச் சுசிலமான வழக்கங்களை அவர்கள் அனுசரிக்கும்படி செய்து, அவர்களையும் நாகரிகத்தில் நமக்குச் சமமாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்து நாம் எல்லோரும் ஒற்றுமைப்பட்டால் நம்மை வெல்ல வல்லவர்கள் இவ்வுலகத்தில் யாரேனும் இருப்பார்களா? ★

# கலை இலக்கிய அரங்கம்

## லூசுன் படைப்புகளில் இருந்து-1

நான் கண்ட கனவு ஒன்று. எனது ஆரம்ப பாடசாலையிலிருந்துகொண்டு கட்டுரை எழுத முயன்றேன். எனது ஆசிரியரைக் கேட்டேன் — ''அபிப்பிராயம் வெளியிடல்'' என்பதுபற்றி எப்படி எழுதுவதென்று.

## அபிப்பிராயம் வெளியிடல்

''அது மெத்தக் கடினம்'' என்று தனது முக்குக் கண்ணாடியின் ஓரங்களினூடாக என்னைப் பார்த்துக் கூறினார் — ''உனக்குக் கதையொன்று கூறட்டுமா? என்றார்.

''வீட்டிலே ஆண் குழந்தையொன்றுபிறந்துவிட்டால் குடும்பத்தோர் அனைவரும் பூரிப்புக்கொள்வர். மாதம் ஒன்று சென்ற பின்பு வைக்கின்ற விழாவிற்கு வரும் நண்பர்களாம் குழந்தையை பாராட்டுவாரென எதிர் பார்ப்பர்.

வந்தாரில் ஒருவர், 'இவன் பெரும் தனவந்தன் ஆவான்' என்றார்; அனைவரும் அவரை நன்றியோடு நோக்கினர்.

மற்றவர் ஒருவர் 'இவன் பெரிய அதிகாரியாவான்' என்றார்; அனைவரும் பூரிப்பும் பெருமையும்கொண்டு அவரைப் பாராட்டினர்.

வேறொருவர் 'இக்குழந்தை இறப்பது உறுதி' என்றார்; எல்லோருமாக அவரை நன்றாகத் தாக்கினர்.

பிறந்த குழந்தை இறப்பது என்னவோ உண்மை. பெரும் பணக்காரனாவதோ — அதிகாரியாவதோ நடக்கக் கூடியதென்று யார் கண்டார்? முழுப்பொய்யை அல்லவா கூறுகிறார்கள். பொய் கூறினோர் பாராட்டப்படுகிறார்கள். உண்மை சொன்னவனுக்கு அடியும் உதையும். நீ என்ன கருதுகிறாய்? என்றார்.

'' ஐயா எனக்குப் பொய் சொல்லவும் விருப்பமில்லை; அதேநேரம் உண்மையை கூறி அடிவாங்கவும் சக்தியில்லை, என்ன செய்யலாம்?'

ஆசிரியர், ''குழந்தையைத்தூக்கி முத்தமிட்டு 'இவன்... இவன்... இஈஇஈ... இவன்... இவன்...... எனச் சும்மா இழுத்துக் கொண்டு போ... உன் கடமை முடிந்துவிடும்'' என்றார்.

தமிழில்: க. நடனசபாபதி

## பாரதியாரின் புதிய ஆத்திசூடி

| | |
|---|---|
| 29. சுமையினுக்கு இளைத்திடேல் | 39. ஞிமிரென இன்புறு |
| 30. சூரரைப்போற்று | 40. ஞெகிழ்வது அருளின் |
| 31. செய்வது துணிந்துசெய் | 41. ஞேயம் காத்தல்செய் |
| 32. சேர்க்கை அழியேல் | 42. தன்மை இழவேல் |
| 33. சைகையில் பொருளுணர் | 44. திருவினை வென்றுவாழ் |
| 34. சொல்வது தெளிந்து சொல் | 45. தீயோர்க்கு அஞ்சேல் |
| 35. சோதிடம் தனையிகழ் | 46. துன்பம் மறந்திடு |
| 36. சௌரியம் தவறேல் | 47. தூற்றுதல் ஒழி |
| 37. ஞமலி போல் வாழேல் | 48. தெய்வம் நீ என்றுணர். |
| 38. ஞாயிறுபோற்று | |

தொடரும்

★ ★ ★



## பாரதியார் கவிதைகளில்

ஒன்றுண்டு மானிடசாதி — பயின்று
உண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்வார்;
இன்று படித்தது நாளை — உயர்ந்
தேற்றம் அடையும் உயர்ந்த திழியும்

உண்மையின்பேர் தெய்வம் என்போம் — அன்றி
ஓதிடும் செய்வங்கள் பொய்யெனக் கண்டோம்
உண்மைகள் வேதங்கள் என்போம் — பிறிது
உள்ள மறைகள் கதையெனக்கண்டோம்

கடலினைத் தாவும் குரங்கும் — வெங்
கனலிற் பிறந்தோர் செவ்விதழ்ப் பெண்ணும்,
வடமலை தாழ்ந்ததனாலே — தெற்கில்
வந்து சமன்செயும் குட்டை முனியும்,

நதியி னுள்ளேமுழு கிப்போய் — அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுறவே மணம் செய்த — திறல்
வீமனும் கற்பனை என்பது கண்டோம்

ஒன்றுமற்றொன்றைப் பழிக்கும் — ஒன்றில்
உண்மையென் றோதிமற் றொன்றுபொய்யென்னும்
நன்று புராணங்கள் செய்தார் அதில்
நல்ல கவிதை பலபல தந்தார்

கவிதை மிகநல்ல தேனும் — அக்
கதைகள் பொய்யென்று தெளிவுறக்கண்டோம்;
புவிதனில் வாழ்நெறிகாட்டி — நன்மை
போதிக்கும் கட்டுக்கதைகள் அவைதாம்

காலத்திற்கேற்ற வகை — அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் — எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை

வையகம் காப்பவரேனும் — சிறு
வாழைப்பழக்கடை வைப்பவரேனும்
பொய்யகலத்தொழில் செய்தே — பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்

5.ம் பக்கத் தொடர்......

கருதுவதும் அவர்கள் தவறு செய்ய மாட்டார்கள் என நினைப்பதும் அவர்களது சிந்தனையையே மறுப்பதாகும். இது கத்துவார்த்த இலட்சியவாதம். இயக்கவியலுக்கு மாறுபட்ட இயந்திரரீதியான வரட்டுத் தத்துவம். மாக்சிச-லெனினிச மாஓசேதுங் சிந்தனை என்பது புரட்சிகர நடைமுறைக்கு வழிகாட்டி, சரியாக புரிந்துகொண்டு அதனை ஏற்றுக்கொண்டால் அது தவறற்ற ஓர் வழிகாட்டி. மாறாக யந்திர ரீதியில் செயல்படுத்தினால் அது அழிவுக்கே வழிதேடும்.

மாசேதுங் தனது வாழ்க்கையில் தவறு செய்தார் என்பதை மறுப்பது தவறு. பல தடவை அவரே தனது தவறுகளை விமர்சித்துள்ளார் அவர் இறந்தபின் ஏனையவர்கள் அவரது தவறுகளை ஆராயக் கடமைப்பாடுடையவராயுள்ளனர். குறிப்பாக அவரது பிற்கால தவறுகளேயாகும்.

இன்னும் சில ஆண்டுகளில் மாசேதுங்கின் நாமம் மறைந்துவிடும் அல்லது தூற்றப்படும் என்று சிரைரல் கூறப்படுகிறது. எமது அபிப்பிராயப்படி இது நடைபெறாது என்பது திண்ணம். விடுதலைக்காக அடித்துக்கொண்டிருக்கும் சகல ஒடுக்கப்பட்ட மக்கள் மனதிலும் மாஓசேதுங் அவர்களுடைய நாமம் பதித்திருக்கிறது. அவரது நாமம் வாழ்கிறது — வளர்கிறது. முக்கியமாக அவரது சிந்தனை, அவர் வளர்த்த மாக்சிசம் லெனினிசம் வாழ்கிறது - வளர்கிறது மாக்சிசம்—லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை உலகின் ஒடுக்கப்பட்டோரை விடுதலைக்கும் — சோஷலிசத்திற்கு எடுத்துச் செல்வது திண்ணம். அப்பாதையில் அதுவும் வளர்ந்து செல்லும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

நன்றி;
'அவுஸ்ரேலியன் கம்யூனிஸ்ட்'

# தோட்டத் தொழிலாளர்களை தார்மீக ஆட்சி திட்டமிட்டே அடக்குகிறது

## டன்சினன் தோட்டத்தில் வேலை நிறுத்தம்

எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் தோட்டத் தொழிலாளர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனும் இரண்டாந்தர நிலையிலும் நடத்தப்படுவது வழமையாகிவிட்டது. இதற்கு இனம் என்ற பிரச்சினை மட்டுமல்ல வர்க்கம் என்ற காரணமே முக்கியமானதாகும். ஒவ்வொரு அரசும் தனக்கு எதிராகத் தோட்டத் தொழிலாளர்கள் கிளம்பாது இருப்பதற்காக தோட்ட தொழிற் சங்கம் ஒன்றினது தலைவர்களுக்கு அமைச்சர், எம். பி. மற்றும் இயக்குனர்கள் போன்ற பதவிகளைக்கொடுத்துத் தமது பக்கத்தில் வைத்துக்கொள்வார்கள். அதையே தாம் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கிய சலுகையாகவும் பிரசாரம் செய்து கொள்வார்கள்.

இந்த வகையில் தற்போதைய யூ.என்.பி. அரசு கடந்தகால அரசாங்கங்கள் சகலதையும்விட ஒருபடி மேலே சென்று தோட்டத் தொழிலாளர்களை நசுக்குவதில் முன்னணிப் பாத்திரம் வகித்துவருகிறது. சம்பள உயர்வின்மை, மாத சம்பளமோ அன்றி ஆண்பெண் சம சம்பளமோ வழங்கப்படாமை, கல்வி சுகாதார வீட்டுப் பிரச்சினைகள், இவை போதாதென்று இனவாத வன்செயல்களை கட்டவிழ்த்துவிட்டமை தோட்டத் தொழிலாளர்களை நாளாந்தம் நலிவடையச் செய்துவருகின்றன. இன்று மலையகத்தின் சகல பகுதிகளிலும் ஆங்காங்கே வேலை நிறுத்தங்கள் தொழிலாளர்களால் முன்னெடுக்கப் படுகின்றன. யாருக்கு எதிராக இவை நடைபெறுகின்றன? அரசாங்கத்தின் அமைப்புக்களாக உள்ள நிர்வாகத்தின்கெடுபிடிகட்கும், அநீதிகட்கும் எதிராகவேதான். ஜனவசம, உவசம, நட்சா போன்ற நிர்வாக அமைப்புகளே தொழிலாளர்களை அடக்க முயலுகின்றன.

இதன் ஒரு உதாரணமே பூண்டுலோயா டன்சினன் தோட்ட வேலை நிறுத்தமாகும். ஒரு தோட்ட தொழிலாளியின் வீட்டுத் தளபாடங்கள் தூக்கிவீசி சேதப்படுத்தப்பட்டுளது. மற்றொரு தோட்டத் தொழிலாளியின் மரக்கறித்தோட்டம நாசம் செய்யப்பட்டது; பல தொழிலாளர்கள் பயமுறுத்தப்பட்டனர். இவற்றை கண்டித்து பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இத்தனை அநீதிகளையும் இழைத்துவரும் தோட்ட நிர்வாகம் பேச்சுவார்த்தைக்குக் கூட மறுத்துவருகிறது. நிர்வாகம் வேறு அரசு வேறு அல்ல. யாவும் அரசின் ஆலோசனைப்படியே நடைபெறுகின்றன.

திரு தொண்டமான் அமைச்சராக வீற்றிருக்கும் யூ.என் பி. அரசு தோட்டத் தொழிலாளர்களுக்கு ''புது வாழ்வு'' அளிக்கும்லட்சணம் இதுதான் என்பதை இன்று மலையக தொழிலாளி வர்க்கம் நன்கு உணர்ந்துவருகிறது. சகலவிதமான ஏமாற்று, மயக்க மொழிகளை எல்லாம் உதறித்தள்ளிவிட்டு போராட்டப் பாதையில் வீறுநடை போடுவதைத்தவிர தோட்ட தொழிலாளர்களுக்கு வேறு மார்க்கம் கிடையாது.

# யாழ் மாநகரசபையில் 66 தொழிலாளர் இடைநிறுத்தம்?

## பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை!

'பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் சகல ஊழியர்களுக்கும் நியந்தனை இன்றி வேலை வழங்கவேண்டும்' இவ்வாறு ஜனாதிபதியையும் பிரதமரையும் கேட்டுக்கொள்ளும் ஏகமனதான தீர்மானத்தை அண்மையில் யாழ் மாநகர சபை நிறைவேற்றியது.

'பொது வேலைநிறுத்தத்தால் வேலை இழந்துள்ள ஊழியர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பைத் தாங்க முடியாத நிலையிலேயே அவர்கள் 300 ரூபா சம்பள உயர்வு கேட்டனர். அப்படியானவர்களை வேலையிலிருந்து நீக்கியது அநீதியானதாகும். நீதிக்கும் நியாயத்திற்குமான போராட்டம் ஒருபோதும் தோல்வியடைய மாட்டாது' இவ்வாறு யாழ் மாநகரசபை முதல்வர் இராசா விசுவநாதன் அண்மையில் வேலை இழந்தோருக்கான உண்ணாவிரதப போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை விடுத்தார்.

''அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் தமிழ்த்தொழிலாளர்களின் உரிமைக்குரலை வெளிக்கொண்டுவர ஒரு பத்திரிகை அவசியம்'' இவ்வாறு துணை முதல்வர் எம். அலோசியஸ் அவர்கள் ஒரு பத்திரிகை வெளியீட்டு விழாவில் பேசினார்.

இவ்வாறு பேசிவரும் யாழ். மாநகர சபை முதல்வரும் துணை முதல்வரும் ஏனைய நிர்வாகத்தினரும் தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள தொழிலாளர்களை எவ்வாறு நடத்துகின்றனர் என்பதே மிகமுக்கிய கேள்வியாகும்.

யாழ். மாநகர சபையில் மூன்று நான்கு வருடங்கட்கு மேல் வேலைசெய்து வந்த 66 தெருவேலைத் தொழிலாளர்கள் கடந்த 20-11-81ல் இருந்து எவ்வித காரணமும் இன்றி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். இதுவரை அவர்களுக்கு வேலை வழங்கப்படவில்லை. இதையிட்டு நவலங்கா தொழிற்சங்கத்தின் மாநகரசபை கிளையினர் பல தடவைகள் முதல்வரோடு பேச்சுவார்த்தை நடாத்தி அறுபத்தாறு தொழிலாளர்களின் பரிதாபநிலையை எடுத்துக்கூறிய போதிலும் முதல்வரும் ஏனையோரும் விடயத்தை தட்டிக்கழித்து வருகின்றார்கள். முதலில் மழையைக் காரணம் கூறிய முதல்வர் பின்பு பணம் இல்லை என்று கையை விரிக்கிறார். முதல்வரும் ஏனைய உறுப்பினர்களும் தத்தமக்கு தேவையானவர்களுக்கு புதிய புதிய நியமனங்களை ,மாநகரசபையில் வழங்குவதற்கு பணம் வைத்திருக்கின்றார்கள். ஆனால் மூன்று நான்கு வருடங்களாக மாநகரசபையில்வேலைசெய்து வந்த சாதாரண அப்பாவித் தொழிலாளர்கட்கு வேலை கொடுப்பதற்கு மட்டும் மாநகரசபையில் பணம் இல்லையாம்.

யாழ். மாநகரசபையில் வேலைசெய்யும் பெரும்பாலான தொழிலாளர்கள் கடந்த காலங்களில் பேச்சுவார்த்தைகளில்மூலம் பெற முடியாத தமது உரிமைகளையும் கோரிக்கைகளையும் போராட்டங்களின் மூலமே வென்றெடுத்தனர் என்பது அனைவரும் அறிந்ததே. எனவே வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட 66 தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகட்காகவும் மராமத்துப் பகுதித் தொழிலாளர் சமர்ப்பித்த ஏனைய கோரிக்கைகளுக்காகவும் போராட்டத்தில் இறங்குவதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் கிடையாது.

தமிழனைத் தமிழன் ஆளவேண்டும் என்று சதா பேசிவரும் இராசா விசுவநாதனை முதல்வராகக்கொண்ட யாழ். மாநகரசபை நிர்வாகம் இடைநிறுத்தம் செய்யப்பட்ட 66 சுத்தமான தமிழ்த் தொழிலாளர்களுக்கும் உடன் வேலை வழங்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் தொழிலாளர்களின் போராட்டமும் தவிர்க்கமுடியாததாகிவிடும். நீதிக்கும் நியாயத்திற்குமான போராட்டம் ஒருபோதும் தோல்வி காண மாட்டாது என்பது உறுதியாக்கப்படும்.

# கோலான்குன்று இணைப்பில் இஸ்ரேலின் அரக்கத்தனம்

கடந்த வருடத்தின் இறுதியில் இஸ்ரேல கோலான் குன்றுப் பிரதேசத்தில் யூத சட்டங்களையும், நீதிபரிபாலனத்தையும் நிர்வாகத்தையும் அமுல் நடத்துவதென தன்னிச்சையாக எடுத்த முடிவு தொடர்ந்து பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டு வருகிறது. அரபு—இஸ்ரேல் யுத்தங்களின் போது ஆயுத பலத்தினால் சிரியாவிடமிருந்து இஸ்ரேல் ஆக்கிரமித்திருந்த பகுதிகளின் ஒன்றே கோலான் மலை பிரதேசமாகும். சிரிய மக்கள் வாழும் பகுதி அது. எல்லா வகையிலும அது சிரியாவிற்குச் சொந்தமானதே. யுத்த நிலைமைகளினால் இஸ்ரேலின் இராணுவ ஆக்கிரமிப்பில் அப்பகுதி இருந்தபோதும், என்றோ ஒருநாள் அது மீண்டும் சிரியாவுக்கு உரியதாகும் என்று அங்கு வசிக்கும் அரபுமக்களும் உலக மக்களும் நம்பிவந்தனர்.

சில மாதங்களுக்கு முன் திடீரென இஸ்ரேல் அப்பிரதேசத்தைத் தனது சட்டபூர்வமான உடமையாகப் பிரகடனம் செய்தது உலக மக்களின் ஏகோபித்த கண்டனத்தைப் பெற்றுள்ளது எதிர்பார்க்கக்கூடிய விதத்தில் இந்த மிருகத்தனமான செயல் அரபுமக்களை கூடுதலாக ஒன்று சேர்த்திருக்கிறது. வழக்கம் போலவே இஸ்ரேலின் இந்த எதேச்சாதிகாரப் போக்குக்கு அமெரிக்காவின் ஆதரவு இருப்பதை யாவரும் அறிவர். இவ்வாறு இஸ்ரேலுக்கு கண்மூடித்தனமான ஆதரவை வழங்குவதனால், மத்தியகிழக்கில் அமெரிக்கா முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டுளது. ஏகாதிபத்தியம் தனக்குத்தானே எதிர்ப்புகளையும், சங்கடங்களையும் தேடிக்கொள்வதை இது காட்டுகிறது. அதே நேரத்தில் உலகசமாதானத்துக்குக் குந்தகம் விளைவிப்பதாகவும் இருக்கிறது.

இத்தகைய பின்னணியிலேயே ஜனவரி இருபதாம் திகதி ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கூட்டம் ஒன்றில், ஜோர்தானின் வேண்டுகோளின் பேரில் இஸ்ரேலை வன்மையாகக் கண்டித்தும், ஐ. நா. அங்கத்தவநாடுகள் இஸ்ரேலுக்கு எதிராகத் தடைகளை விதிக்கவேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது. இக் கூட்டத்தில் அமெரிக்கா தனது தடுப்பு (வீட்டோ) உரிமையைப் பயன்படுத்தி அத்தீர்மானத்தை செல்லுபடியாகாமல் செய்தது. பதினைந்து நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் பாதுகாப்புச் சபையில் சிலநாடுகளுக்குத் தடுப்பு உரிமைஉண்டு, ஜோர்தானின் ஆதரவிலேகொண்டு வரப்பட்ட கண்டனத் தீர்மானத்துக்கு சீனு உட்பட ஒன்பது நாடுகள் சாதகமாக வாக்களித்தன; தனியொரு நாடான அமெரிக்கா எதிர்த்து வாக்களித்தது; பிரிட்டன், பிரான்ஸ், யப்பான், அயர்லாந்த, பனமா ஆகிய ஐந்தும் வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை. இச் சம்பவம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முழு ஆதரவும் இஸ்ரேலுககு இருப்பதைக் காட்டுகிறது.

எகிப்து, வளைகுடா நாடுகள் உட்பட எல்லா அரபு நாடுகளும் இது விடயத்தில் ஒன்றுபட்டு நிற்பதையும், பொருட்படுத்தாமல் அமெரிக்கா இஸ்ரேலை ஆதரிப்பது ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையிலான போட்டா போட்டி உக்கிரமடைவதையே காட்டுகிறது. அண்மைக் காலத்தில் தாய்வானுக்கு இராணுவ தளபாடங்களை விற்க அமெரிக்கா முனைவது அதன் இன்றைய போக்கை அம்பலப்படுத்தியுளது. உலகெங்கும் நெருக்கடிகளைத் தோற்றுவித்து பல்வேறுபிரச்சினைகளுக்கும் இராணுவரீதியான தீர்வுகளைக் காண நீதி தன்மையிலான அமெரிக்க அரசாங்கம் எண்ணுகிறது. அதற்கு அமெரிக்க மக்களிடமிருந்தே எதிர்ப்புக் கிளம்பத் தொடங்கியிருப்பது அவதானிக்கத் தக்கதாகும்.

அச்சுப்பதிப்பு; யாழ்ப்பாண அச்சகம 407 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். வெளியீடு சி. நவரத்தினம் 15/1 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

## கல்வி வெள்ளை .....

1-ம் பக்கத் தொடர்

கத்தினர் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரையும் அறிவு ரீதியில் முடங்கச் செய்து எதிர்காலத்தில் உழைக்கும் வர்க்கங்கள் அனைத்தையும் அடக்கிஒடுக்குவதற்கான வழிகளில் ஒன்றாகவே கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆகவே தேசிய பொருளாதாரத்திற்கோ தேசிய அபிலாஷைகளுக்கோ அன்றித் தேசிய வாழ்வுக்கோ எவ்வகையிலும் உதவி செய்யாது உயர்வர்க்கத்தினராகிய ஒரு சிறு பகுதியினருக்கும் அவர்களது பொருளாதார, அரசியல், கலாச்சார நடைமுறைகளுக்கும் உதவிசெய்யக்கூடிய கல்விவெள்ளை அறிக்கையை நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும். அது மக்களின் எதிர்ப்பை ஏற்கனவே பெற்றுள்ளதால் சிறுசிறு மாற்றங்களுடன் அமுலாக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் முற்றுமுழுதாக கல்வி வெள்ளை அறிக்கை வாபஸ் பெறப்படவேண்டும் என்பதே மக்களினதும் — மாணவர்களினதும் — கல்வியாளர்களினதும் உறுதியான கோரிக்கையாக இருக்கவேண்டும். அதுவே நியாயமான கோரிக்கையும் ஆகும். ★

1-ம் பக்கத் தொடர்.....

வோ ஆட்சி செய்தவைகளை மட்டுமே இப்பொழுதும் நினைவுடன் வைத்திருந்து மக்கள் தமக்கு மீண்டும் ஆதரவுவழங்கவேண்டும் எனவும் கோருகிறார்கள் சில சமயங்களில் மக்களைப் பார்த்து அடுத்த தேர்தலில் தங்களை அதிகாரத்துக்குக் கொண்டு வராதுவிட்டால் என்ன நடக்கும் என்பதை மறைமுகமாகப் பயமுறுத்தவும் பார்க்கின்றனர்.

இந்நடவடிக்கைகள் ஒரு சிலரது விருப்பு வெறுப்புகள் அல்ல; ஒரு வர்க்கத்தின் அதாவது இந்நாட்டின் பெருமுதலாளி வர்க்கத்தினதும் அவர்களது எஜமானன ஏகாதிபத்தியத்தினதும் நடவடிக்கைகளும், விருப்பு வெறுப்புக்களுமாகும். இந்த உண்மையைப் புரிந்து கொண்டால்மட்டுமே யூ. என். பி. யையும் ஜே. ஆர். ரையும் மக்கள் இனம் கண்டு கொள்ளவும் தோற்கடிக்கவும் முடியும்

இந்த வகையில் இன்றைய உடனடிப் பிரச்சினை என்ற ரீதியில் பாராளுமன்ற முனையில் யூ. என். பி. தோற்கடிக்கப்பட வேண்டியது ஒரு தவிர்க்க முடியாத தேவையென்றபோதிலும் அதற்கப்பால் மக்களது பரந்துபட்ட புரட்சிகர போராட்டத்தின் மூலம் யூ. என். பி. யையும் அதன் வர்க்க சக்திகளையும் தோற்கடிப்பதனால் மட்டுமே இந்நாட்டு உழைக்கும் வர்க்கத்திற்கு இறுதி விமோசனம் கிடைக்க முடியும்; எனவே யூ என். பி. எதிர்ப்பு மக்கள் இயக்கத்தை சக்திமிக்கதாக கட்டியெழுப்புவது புரட்சிகர சக்திகளின் பிரதான பணியாகும்.